பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 29 புதன்கிழமை 13.01.2021 கதிர் 69

### இனி இது ரகசியம் அல்ல!

ரஞ்சன் ராமநாயககவுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு விட்டது. அவரின் எம்.பி. பதவி உடனடியாக பறிபோகுமா என்பதுதான் கேள்வி.

நாட்டின் மீயுயர் நீதிமன்றமான உயர்நீதிமன்றமே இந்தத் தீர்ப்பை பக்கம்02 »

# நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரி நினைவுத் தூபியை மீளமையுங்கள்!

## கூட்டமைப்பு சார்பில் சுமந்திரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜனவரி 13

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை உடைப்பதற்கு பொறுப்பாளிகளாக இருந்த அனைவரும் அதற்காக நிபந்தனையற்ற மன்னிப்புக் கோர வேண்டும், உடனடியாக அது மீள நிர்மாணிக்கப்பட வேண்டுமென நாம் வலியுறுத்துகிறோம்.

– தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. நேற்றுத் தாம் விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். பக்கம் 02 »

## ஜெனிவாவில் நேற்று கண்டனப் போராட்டம்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில்அமைக்கப்பெற்றிருந்த முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் நினைவுத் தூபியை இடித்தழித்தமையைக் கண்டித்து சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் ஜெனிவா ஐ.நா. மனிதவுரிமைப் பேரவை முன்றிலான முருகதாசன் திடலில் பக்கம் 02 »

## வாசுவுடன் தொடர்பைப் பேணிய பத்து எம்.பிக்கள் சுயதனிமையில்



கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுடன் தொடர்பைப் பேணிய 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று நாடாளுமன்றத்தின் படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

குறித்த நாடாளு பக்கம் 02 »

## கட்டுப்பாட்டுடன் தைப்பொங்கல்

தைப்பொங்கல் பண்டிகையை சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய கொண்டாடுமாறும், முடிந்தளவு நடமாட்டங்களை தவிர்த்து, சமூக இடைவெளியை பக்கம் 02 »

## புதுக்குடியிருப்பு சந்தை திறப்பு அதுக்கு மட்டும் எப்படி அனுமதி?

### பின்கதவால் வழங்கப்பட்டதா எனக் கேள்வி

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், ஜன.13

வடக்கு மாகாணத்தின் அத்தனை பொதுச் சந்தைகளையும் பூட்ட வைத்துள்ள வடக்கு மாகாண சுகாதாரத்திணைக்களம் புதுக்குடியிருப்பு சந்தையினை மட்டும் பக்கம் 11 »

## வடக்கு 12 நாள்களில் 173 பேருக்கு தொற்று

### வவுனியாவில் மட்டும் 124 பேர் இலக்கு

(எஸ்.நிதர்ஷன்)



இம்மாதம் கடந்த 12 நாள்களில்மட்டும்வடக்கு மாகாணத்தில்173பேருக்குக்கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண பக்கம் 02 »

## மேலும் நால்வர் சாவு கொரோனா காவு 244

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் நால்வர் பலியாகியுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.

கொழும்பு 13, வெல்லம்பிட்டிய, மாத்தளை மற்றும் அங்வெல்ல பகுதிகளைச் சேர்ந்த இரு ஆண்களும், இரு பெண்களுமே பக்கம் 02 »

## கோட்டாவைத் தாக்கி எழுதியவர் கைது

ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிராக முகப்புத்தகம் வழியாக அவதூறான கருத்துக்களைப் பதிவிட்டார் என்ற குற்றச்சாட்டில் முஸ்லிம் நபர் ஒருவர் கொழும்பு - தெஹிவளையில் வைத்து நேற்று பக்கம் 02 »

## மேலும் 588 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் நேற்றும் 588 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 45 ஆயிரத்து 770 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. பக்கம் 02 »

## வவுனியா நகர மையம் உடனடியாக முடக்கம்

### தொற்று அதிகரிப்பை அடுத்து



(ந.லோகதயாளன், கி.வசந்தரூபன்)
யாழ்ப்பாணம், ஜனவரி 13

வவுனியாவில் அதிகரிக்கும் கொரோனாத் தொற்றையடுத்து நேற்று முதல் மறு அறிவித்தல் வரையில் நகரின் மையப்பகுதி பக்கம் 02 »



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வழங்கியுள்ளது. அதனால் இதற்கு மேல் இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய இடமில்லை. தேவையானால் மூன்று நீதிபதிகளைக் கொண்ட ஆயம் வழங்கிய தீர்ப்பை ஐந்து நீதியரசர்கள் கொண்ட ஆயத்தில் மீளாய்வு செய்யுங்கள் என்று கோரலாமா எனச் சிந்திக்கப்படுகின்றது. அதற்கு சந்தர்ப்பம் உண்டா, அதனால் பயன் உண்டா என்பவை குறித்து சட்டத் தரப்புகள் சாதகமாக – ஊக்கமாக – பதில் தரவில்லை.

உயர் நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பு வழங்கியமையால் ரஞ்சன் ராமநாயக்காவின் எம்.பி.பதவி உடனடியாகப் பறிபோகுமா என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில்.

இரண்டு வருடங்களுக்குக் குறையாத காலத்துக்குத் தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றம் என்று குறிக்கப்படும் ஒரு குற்றத்தை இழைத்தமையின் பேரில் தண்டனை விதிக்கப்பட்டால் மட்டுமே எம்.பி. பதவியை உடனடியாக இழக்கும் ஆபத்து நேரும்.

ஆனால் இப்போது ரஞ்சன் ராமநாயக்கவுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றம் – நீதிமன்ற அவமதிப்புக் குற்றமாகும். அதற்கு எவ்வளவு காலம் தண்டனை என்று எந்தச் சட்டத்திலும் குறிப்பிடப்படவில்லை. நீதிமன்றம் தனக்கு உசிதமான தண்டனையை விதிக்கலாம்.

இந்தியாவில் இதே போன்ற ஒரு வழக்கு. சட்டத்தரணியும் பிரபல பொது நல செயற்பாட்டாளருமான பிரசாந்த் பூஷண் தமது டுவிட்டர் செய்திகள் மூலம் இந்திய நீதித்துறையை அவமதித்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டார். தன்னுடைய விமர்சனங்களுக்காக மன்னிப்புக் கோரவும் அவர் மறுத்து விட்டார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் அவரைக் குற்றவாளியாகக் கண்ட இந்திய உச்ச நீதிமன்றம் கடந்த ஓகஸ்ட் 31இல் அவருக்கு என்ன தண்டனை விதித்தது தெரியுமா? ஒரு ரூபா மட்டும்.

இந்த அபராதத்தை – ஒரு ரூபாயை– அவர் செலுத்தத் தவறுவாராயின் அவருக்கு மூன்று மாதச் சிறைத் தண்டனையும், அவர் சட்டத்தரணியாகச் செயற்படுவதற்கு மூன்று வருடங்கள் தடையும் நடைமுறைக்கு வரும் என்றது உச்ச நீதிமன்றம்.

ஆக, இலங்கையில் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்கு இவ்வளவு காலம் தான் தண்டனை என்று குறிப்பிடப்படவில்லை.

அதாவது தண்டனைக் காலம் இவ்வளவு என்று வகுக்கப்பட்ட வகையைச் சேர்ந்த குற்றம் அல்ல நீதிமன்ற அவமதிப்பு விவகாரம்.

'ஆனால், அப்படி தண்டனைக் காலம் இவ்வளவு என்று காலவரையறை குறிப்பிடும் ஒரு குற்றத்தின் பேரில் – இரண்டு வருடத்துக்கு மேற்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றத்தை – இழைத்த ஒருவரே எம்.பி. பதவியை இழந்தவராவார்.

எனவே, தண்டனைக் காலம் இவ்வளவு என்று குறிப்பிடாத ஒரு குற்ற வகையின் கீழேயே ரஞ்சன் ராமநாயக்கா தண்டிக்கப்பட்டிருப்பதால் இந்தத் தண்டனை விதிப்புக்காக அவர் பதவியிழக்கும் கட்டாயம் இல்லை.

ஆனால், அவர் சிறைக்குச் சென்று விட்டதால் –

அவரது குற்றத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய வாய்ப்புகள் இல்லாதமையால் –

அவர் நாடாளுமன்றத்துக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்படும்.

அந்த வகையில் மூன்று மாதங்களுக்கு மேல் சபைக்கு பிரசன்னம் தராமல் இருப்பதற்கு நாடாளுமன்றத்தின் முன் அனுமதியைப் பிரேரணை சமர்ப்பித்து நிறைவேற்றி அவர் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்குத் தேவையான நாடாளுமன்றப் பலம் அவர் சார்ந்த எதிரணிக்கு இல்லை.

ஆகவே, நாடாளுமன்றுக்குச் சமுகம் தராமல் இருப்பதற்கான முன் அனுமதியை அவர் நாடாளுமன்றத்தில் பெறுவதற்கு வாய்ப்பில்லை.

அதனால், தற்போதைய தண்டனை விதிக்கப்பட்ட காலத்தில் இருந்து அடுத்த மூன்று மாதகாலத்தின் பின்னர் அவரின் எம்.பி பதவி – நாடாளுமன்றத்துக்கு அவர் சமுகம் தரத் தவறிய காரணத்தினாலே பறிபோவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

இதுதான் அவரின் பரிதாப நிலைமை!.

– மின்னல் –

## வாசுதேவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மன்ற உறுப்பினர்கள் சகலருக்கும், அவர்களுடன் தொடர்புபட்ட பிரிவுகளுக்கும் தெரியப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கடந்த நாடாளுமன்ற அமர்வு வாரத்தின் நான்கு நாட்களும் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருந்தார் என்று படைக்கல சேவிதர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, இன்றும் (13) நாளைமறுதினமும் (15) முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நாடாளுமன்றத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ள சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர். இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கெடுக்க முடியும் என்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார் எனப் படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ மேலும் குறிப்பிட்டார்.

## மேலும் 588...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 49 யிரத்து 537 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 42 ஆயிரத்து 621 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 672 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## மேலும் நால்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இவர்களில் இருவர் 80 வயதைக் கடந்தவர்கள்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 244 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 231 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் சாவடைந்துள் ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவு உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. (22)

## வடக்கு 12 நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பண்ணையிலுள்ள மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் தற்போது கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பல தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக கடந்த 12 நாள்களில் மட்டும் வவுனியா மாவட்டத்தில் 124 பேரும், யாழ் மாவட்டத்தில் 23 பேரும், மன்னாரில் 14 பேரும், கிளிநொச்சியில் 9 பேரும், முல்லைத்தீவில் 3 பேருமாக இதுவரையில் 173 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் – என்றார்.

## கோட்டாவைத் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

தெஹிவளை – பீற்றர் வீதியைச் சேர்ந்த மொஹமட் சபால் நவ்ஸாட் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

நேற்றுப் பகல் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேக நபர் கொழும்பு பிரதான நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்கும்படியான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

## நிபந்தனையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த யுத்த நினைவு தூபி உடைக்கப்பட்ட நிகழ்வு, காட்டுமிராண்டித்தனமானது. நியாயமாக சிந்திக்கும் எவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதானதும் அல்ல.

இது அனுமதியின்றி கட்டப்பட்டது என்றும் அதன் காரணமாக அது அகற்றப்படவேண்டிய ஒன்று என்றுன் கூறுவது, இந்த மிலேச்சத்தனத்தை இன்னும் மோசமாக்கும் செயலாகும்.

யுத்த நினைவுத் தூபிகளுக்கு ஊள்ளூராட்சி சபைகளின் கட்டட அனுமதி தேவையில்லை. அப்படி இல்லையென்றால் வட– கிழக்கு முழுவதும் இராணுவத்தால் அமைக்கப்பட்டிருக்கும் யுத்த நினைவு தூபிகளும் உடைக்கப்பட வேண்டும். இப்படியான தூபிகள் கிளிநொச்சி, ஆனையிறவு, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களிலும் முல்லைத்தீவில் பல இடங்களிலும் உள்ளன. இந்த யுத்தத்தில் சில ஆயிரம் இராணுவத்தினர் மரித்தமை உண்மை. அவர்கள் நினைவு கூரப்பட வேண்டும். ஆனால் எண்ணிலடங்காத பொது மக்களும் கொல்லப்பட்டார்களே. மற்றது எதிர் தரப்பு போராளிகள். அவர்களையும் நினைவு கூர வேண்டாமா?

யுத்தத்திலே இழந்தவர்களை ஒரு சமூகமாக கூடி நினைப்பதற்கும், துக்கப்படுவதற்கும் உதவும் வகையில் நினைவு தூபிகள் பிரத்தியேகப்படுத்தப்பட்ட பொது இடமாக அமையலாம். அந்த இடம் அவர்களுக்கு விசேடமான ஒன்றாக இருக்கும். அங்கே அவர்கள் கூடி ஒருவரை ஒருவர் விசாரித்து ஆறுதல் சொல்லலாம்.

நினைவு தூபிகள் உயிரோட்டமுள்ள சரித்திரப் பாடங்களாகவும் அமையும். அங்கே இளைய சமூகத்துக்கு யுத்தத்தின் காரணிகளையும் விளைவுகளையும் எடுத்துக் கூறி இனப்பிரச்சினை ஆயதப் போராட்டமாக மாறுவதற்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டியதன் அத்தியாவசியத்தை விளக்கலாம். பல்கலைக்கழக சமூகத்தினர் மரணித்ததை நினைவு கூறுவதற்கு மேலதிகமாக பல்கலைக் கழகம் ஒன்றில் அப்படியான தூபியை அமைப்பதன முக்கியத்துவம் இதுதான்.

யுத்த நினைவு தூபி ஒன்று நிறுவப்படுகின்ற போது அது இறந்தவர்களை நினைவுகூரும் ஒரு புனித பூமியாகிறது. அதனால்தான் இந்த தூபி உடைத்தழிக்கப்பட்ட போது பெரு வெள்ளமாக உணர்வுகள் வெளிவந்தன. இந்தக் கொடூரச் செயலைக் கண்டித்த ஒன்டாரியோ முதல்வர் டக் போட், தென் ஆசியா மற்றும் பொது நலவாய நாடுகளுக்கான பிரித்தானிய இராஜாங்க அமைச்சர் தாரீக் அஹமது, தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள், இலங்கையில் முஸ்லிம், சிங்கள அரசியல் தலைவர்கள் உள்ளடங்கலாக அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

இந்த விடயம் 'தீர்க்கப்பட்டது' என்பதில் எமக்கு முழு உடன்பாடு கிடையாது. தமிழ் நாட்டு தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்த காரணத்தினால் இந்த விடயத்தை சற்று தணிக்குமாறு அரசாங்கம் தனக்குச் சொன்னதாக துணைவேந்தர் கூறுவதை நாம் செவிமடுத்தோம். அத்திவாரக் கல் வைத்தது, செய்த தவறுக்கு வருந்தி, அதைத் திருத்துவதாக இல்லாமல், வெறுமனே 'தணிப்பதற்கான' ஒரு நடவடிக்கையாக இருந்தால், அது ஆரம்பத்தில் தூபியை உடைத்ததை விட மோசமான செயலாகும். இந்த நினைவு தூபியை உடைப்பதற்குப் பொறுப்பாளிகளாய் இருந்த அனைவரும் அதற்காக நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரி உடனடியாக அது மீள நிர்மாணிக்கப்பட வேண்டுமென நாம் வலியுறுத்துகிறோம். – என்று உள்ளது.

## கட்டுப்பாட்டுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பேணுமாறும் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவுக்கு பொறுப்பான விசேட நிபுணர் சுதத் சமரவீர கேட்டுக் கொண்டார்.

முடிந்தளவு பயணங்களை தவிர்க்க வேண்டும். விடுமுறை என்ற காரணத்தால் வெளியே செல்லக் கூடாது. அத்தியாவசிய காரணங்களுக்காக வெளியில் செல்கையில் சுகாதார விதிமுறைகளை அனுசரிக்க வேண்டும். குறிப்பாக மேல் மாகாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்பவர்கள் வீடுகளில் தங்கியிருப்பது அவசியம் என்றும் விசேட நிபுணர் சுதத் சமரவீர மேலும் குறிப்பிட்டார்.

## வவுனியா நகரர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முழுமையாக தற்காலிகமாக தனிமைப்படுத்தலிற்கு உட்பட் டுள்ளது.

அப்பகுதிகளில் தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்படுவதாக மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வவுனியா நகரிலிருந்து நெளுக்குளம் சந்தி வரையான பிரதேசம், வவுனியா நகரிலிருந்து தாண்டிக்குளம் சந்தி வரையான பகுதி, வவுனியா நகரிலிருந்து கண்டி வீதியில் வன்னி இராணுவ முகாம் வரையிலான பகுதி, வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் சந்திக்கு உட்பட்ட பிரதேசம் ஆகியவற்றுடன் வவுனியா நகரிலிருந்து மாமடுவ சந்தி வரையிலுமான பகுதி ஆகியன முடக்கப்படுவதுடன் மக்கள் வெளிச்செல்ல அனுமதியும் மறுக்கப்பட்டு மக்கள் அனைவரும் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் பாதுகாப்பு பிரிவினர் மூலம் போக்குவரத்து நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அத்தியாவசிய தேவையின்றி நகருக்குள் செல்வற்கு அனுமதி மறுக்கப்படுவதுடன் அரச உத்தியோகத்தர்கள் அடையாள அட்டையைப் பாதுகாப்பு பிரிவினருக்கு அடையாளப்படுத்தி கடமைகளுக்கு செல்ல முடியும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தனிமைப்படுத்தலிற்கு உட்படும் பிரதேசத்திற்குள்ளேயே மாவட்டத்தின் முக்கிய வைத்தியசாலை, மாவட்ட செயலகம், சுகாதார அதிகாரி பணிமனை என்பன தொடர்ந்து இயங்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனிமைப்படுத்தப்படும் பகுதிகளூடாக நகருக்குள் பிரவேசிக்கும் தனியார், இ.போ.ச பஸ்கள் நகரின் எப்பகுதியிலும் தரித்து நிற்பதற்கு தடை விதிக்கப்படும். வைத்தியசாலைக்கு அருகேயுள்ள பஸ் தரிப்பிடத்தில் மாத்திரம் பஸ்களை நிறுத்த முடியும் எனவும், முடக்கப்படும் பகுதிகளில் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு வழி அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறையினையும் அமுல்படுத்தப்படுவது என்பன போன்ற பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

இதேநேரம் வவுனியா நகரக் கோட்ட பாடசாலைகள் மூடப்படுகின்றன.

அதேசமயம் அப்பகுதியில் தற்போது மேலும் 2 ஆயிரம் பேரிடம் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த 2 ஆயிரம் மாதிரிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் தற்காலிக முடக்கத்தை நீக்குவதா அல்லது நீடிப்பதா என்பதனை தீர்மானிப்பது எனவும் இன்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

வவுனியாவில் அதிகரித்து வருகின்ற கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் முகமாக விசேட கலந்துரையாடல் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சமன் பந்துலசேன தலைமையில் நேற்று வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இவ் விசேட கலந்துரையாடலில் பொலிஸ் உயர் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், வர்த்தக சங்கத்தினர், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர், சமயத்தலை வர்கள், கல்வி திணைக்கள அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## ஜெனிவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கண்டனப் போராட்டம் நடைபெற்றது.

கொட்டும் பனிப்பொழிவுக்கு மத்தியிலும் சுவிஸ்இளையோர் அமைப்புடன் இணைந்து தமிழின உணர்வாளர்கள் மற்றும் மக்களும் தமது வன்மையான கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இப்போராட்டம் மனிதவுரிமைகள் சார்ந்தோரையும் வேற்றின மக்களையும் ஈர்த்திருந்தது.

# முள்ளிவாய்க்கால் நினைவு இடிப்புடன் அரசுக்கு எந்தத் தொடர்புமே இல்லை

## உதய கம்மன்பில தெரிவிப்பு



முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை உடைத்ததிலோ அல்லது அதனை மீள அமைப்பதிலோ அரசாங்கத்துக்கு எவ்வித தொடர்பும் இல்லையென அமைச்சரவைப் பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே உதய கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டமையை அடுத்து, மாணவர்கள் மற்றும் பலரின் கண்டன போராட்டத்தின் பின்னர் இடித்தழிக்கப்பட்ட தூபிக்கான அடிக்கல்லை மீண்டும் அதே இடத்தில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாணவர்களுடன் இணைந்து நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே உதய கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் பல இடங்களில் 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி!

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

குறிப்பாக சில இடங்களில் 100 மி.மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகுமென அந்தத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

சில இடங்களில் 75 மி.மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி பதிவாகமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

எனினும் தெற்கு கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 - 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதோடு, மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அந்தத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# பிரித்தானியா தவிர ஏனைய நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி!

பிரித்தானியா பிரஜைகளைத் தவிர ஏனைய நாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தரலாம் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் கொரோனா வைரஸ் தாக்கம் பரவலடையாது என்றும் உக்ரைன் நாட்டு பயணிகள் நாட்டுக்கு வருகின்றமையைத் தடுக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் தாக்கம் எப்போது முடிவுக்கு கொண்டுவரப்படும் எனக் குறிப்பிட முடியாது என்றும் எனவே கொரோனா தாக்கத்தால் எழுந்துள்ள சவால்களை சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு மத்தியில் வெற்றிகொள்ளவேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட செயலகப் பிரிவில் இடம்பெற்ற நகர அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பிரித்தானிய நாட்டு பிரஜைகள் நாட்டுக்குள் வருவதற்கு மாத்திரமே தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய நாட்டவர்கள் இலங்கைக்கு சுற்றுலா பயணங்களை மேற்கொள்ளலாம்.

உக்ரைன் நாட்டவர் மாத்திரமல்லர் ஏனைய நாட்டவர்களுக்கும் இலங்கைக்கு சுற்றுலா பிரயாணங்களை மேற்கொள்வதைத் தடுக்கும் தீர்மானத்தை சுகாதாரத் தரப்பினரும் கொவிட் – 19 வைரஸ் தொடர்பான தொழில்நுட்பக் குழுவினரும் மாத்திரமே எடுப்பார்கள்.

பிரித்தானிய நாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் நாட்டுக்குள் வருவதற்கு மாத்திரம் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின்னர் வணிக விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும். சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை மேம்படுத்த புதிய சுகாதாரத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம், சர்வதேச விமான சேவைகள் அமைப்பு ஆகிய அமைப்புக்களின் பரிந்துரைகளுக்கு அமையவே சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குள் வரும் சுற்றுலாப் பிரயாணிகள் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும். இதனை சுற்றுலா சேவை முகவர்களுக்குத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். சுற்றுலாப் பிரயாணிகளை அழைத்து வரும் செயற்திட்டம் தொடர்ந்து அவதானிக்கப்படுகிறது.- என மேலும் தெரிவித்தார்.

# சுகாதார வழிகாட்டல்களுக்கு அமையவே நாடாளுமன்ற நடவடிக்கை முன்னெடுப்பு!

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் கொவிட் 19 தொற்றுநோய்க்கு உள்ளாகியுள்ள நிலையில் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய – சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப – நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி உரிய ஆலோசனைகளைப் பெற்றிருப்பதாகவும், கொவிட் 19 தொற்றுக்கு உள்ளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்றிருந்த சகல இடங்களையும் கிருமிநீக்கத்துக்கு உள்ளாக்கியிருப்பதாகவும் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற பணியாளர்கள் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனத் தெரிவித்த நாடாளுமன்ற செயலாளர் நாயகம், எதிர்வரும் நாள்களில் நாடாளுமன்ற வளாகத்திலேயே பணியாளர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன எனவும் கூறினார்.

நாடாளுமன்ற பணியாளர்கள் சுகாதார வழிகாட்டல்களைக் கடுமையாகப் பின்பற்றி கடமைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும், இந்த நிலைமையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லத் தயாராக இருப்பதாகவும் தஸநாயக்க குறிப்பிட்டார்.

அதேநேரம், அடுத்த நாடாளுமன்ற அமர்வுகளின் செயற்பாடுகள் தொடர்பாகத் தீர்மானிக்கும் நோக்கில் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று 13 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்குக் கூடவுள்ளது.

இதில், சாபாநயகர் மற்றும் கட்சித் தலைவர்கள் எடுக்கும் தீர்மானத்துக்கு அமைய நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல செயலகம் தயாராக இருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

# யாழில் 149.3 மி.மீற்றர் மழை வீழ்ச்சி பதிவு

## வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவிப்பு

யாழில் 149.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை காலையிலிருந்து மழையுடன் கூடியகால நிலை தொடர்ந்து நிலவி வருகின்றது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை காலையிலிருந்து நேற்று வரை யாழில் 149.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் யாழ்.நகரப் பகுதியிலேயே அதிகளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் வானிலை ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி பிரதீபன் கூறியுள்ளார்.

மேலும் 24 மணித்தியாலத்துக்கு இந்த மழையுடன் கூடிய காலநிலை தொடரும். வட பகுதியில் 100 மில்லி மீற்றர் எதிர்பார்க்கப்படுகிறது. காற்று 40 – 50 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மழையுடன் கூடிய காலநிலை காரணமாகப் பொது மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு கடல் தொழிலுக்குச் செல்வோர், தாழ்நிலப் பகுதிகளில் உள்ளவர்கள் அவதானமாக இருக்குமாறும் பிரதீபன் வலியுறுத்தியுள்ளார்.

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய மேலும் 23 பேர் கைது!

கடந்த 24 மணித்தியாலங்களில் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில், தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண, தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி செயற்படுபவர்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் அனைவரும் முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய கடந்த வருடத்தின் ஒக்ரோபர் மாதம் முதல் இதுவரையிலான காலப்பகுதியில் முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை என்பன தொடர்பில் 2 ஆயிரத்து 438 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அஜித் ரோஹண கூறியுள்ளார்.

# கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் 599 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி!

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த 6 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இதுவரை 599 கொரோனா நோயாளர்கள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பதிவாகியுள்ளனர் என கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகளின் மாவட்ட பணிப்பாளர் வைத்தியர் மிகாரா எப்பா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்ட ஆறு நோயாளிகளும் இந்திய முதலீட்டு திட்டத்தின் கீழ் இயங்கும் தொழிற்சாலையிலும் கணினி உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையிலும் பணிபுரியும் ஊழியர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐந்து கொரோனா நோயாளிகள் நேற்று சீதுவ சுகாதாரப் பிரிவிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இராஜாங்க அமைச்சர் விமலவீரவும் கொரோனாத் தொற்றுக்குள்ளானார்!



இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தயாசிறி ஜயசேகர, ரவூப் ஹக்கீம் மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கு அடுத்தபடியாக கொரோனாத் தொற்றுக்குள்ளான நான்காவது நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க ஆவார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே அதிகரித்து வரும் கொரோனா தொற்றுக் காரணமாக இன்று மற்றும் நாளை மறுதினம் காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நாடாளுமன்றத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ள சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கெடுக்க முடியும் என்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கோட்டாவின் நெருக்கடிகள்

நாடாளுமன்றத்தில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் பலமான நிலையில் அதிகாரத்தில் இருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ தனது அரசுக் கட்டமைப்பை ஸ்திரமான நிலையில் வைத்திருக்கவில்லை என்று கொழும்பு அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தன்னுடைய அதிகாரப் பிடியை அரசமைப்புக்கான இருபதாவது திருத்தம் மூலம் வலுப்படுத்திக் கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆட்சி அதிகாரப் பிடி மூலம், அரசியல் அதிகாரத்தையும் அடக்கித் தக்க வைத்துக்கொள்ளலாம் என்று எண்ணுகின்றார்.

ஆனால், நாடாளுமன்ற அரசியல் அதிகார விவகாரத்தில் யார் மீதெல்லாம் அவர் ஆதிக்கம் செலுத்த விரும்புகின்றாரோ – அல்லது ஆதிக்கம் செலுத்த வேண்டியிருக்கின்றாரோ – அவர்கள் எல்லாம் இந்த அரசியல் துறையில் பழமும் தின்று கொட்டையும் போட்ட பெருச்சாளிகள். அவர்களுடன் ஒப்பிடும் போது கோட்டாபய ராஜபக்ஷ, அரசியலில் கற்றுக் குட்டிதான்.

தன்னுடைய ஆட்சி அதிகார வலிமையை வைத்துக் கொண்டு, அதை மட்டுமே தன் பலமாகப் பேணிக் கொண்டு – அதன் மூலம் அரசியல் அதிகார ஆதிக்கத்தையும் பிடிக்குள் வைத்திருந்து பேணலாம் என்று அவர் நம்புவது எவ்வளவு தூரத்துக்குச் சாத்தியமானது – தாக்குப்பிடிக்கும் – என்பது கேள்விக்குறியே.

அரசியல் என்பது சாணக்கிய தந்திரத்தோடு கையாளப்பட வேண்டியது.

அரச கட்டமைப்பையே இராணுவ மயப்படுத்துவது, அரசியல் தரப்புகளில் மூத்த – சிரேஷ்ட – தலைவர்களைப் புறமொதுக்கி எதேச்சதிகாரமாக விடயங்களைக் கொண்டு செல்வது, மக்களின் கருத்து மற்றும் உணர்வு நிலைப்பாட்டை அரசியல் ரீதியாக நாடி பிடித்துப் பார்க்கும் திறமையற்றுச் செயற்படுவது – போன்ற இன்னோரன்ன காரணங்களினால், கோட்டாபய ராஜபக்ஷவின் அரசியல் பிடி ஆட்சித் தரப்புக்குள்ளேயே நழுவி, வழுவி, சறுக்கிக் கொண்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மூத்த தலைவர்கள், சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தியும், விரக்தியும், விசனமும் வெளியே தெரியாமல் தீவிரமடைந்து வருகின்றன என்றும் கூறப்படுகின்றது. இது எப்போது, எந்த வடிவத்தில் வெளிப்படும் என்பதை இப்போது எதிர்வு கூறமுடியாவிட்டாலும், அது வலுத்து வருவது வெளிப்படையானது என்கின்றனர் விமர்சகர்கள்.

இப்போது நிலைமையைச் சமாளிப்பதற்காக – அதிருப்தி வெளிப்பாடுகளை முளையிலேயே கிள்ளும் முயற்சியாக – அமைச்சரவை மாற்றம் ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொள்ளக் கூடும் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

அமைச்சர்கள் நியமனத்தில் கடும் அதிருப்தியடைந்திருக்கும் அரசியலின் மூத்த பிரமுகர்கள் சிலருக்கு அவர்களின் சிரேஷ்ட தன்மை, மக்கள் செல்வாக்கு போன்றவற்றைக் கணக்கில் எடுத்து, முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை அளிப்பதன் மூலம் அவர்களைத் திருப்திப்படுத்தி, சமாளிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்கக் கூடும் என சிலர் எதிர்வு கூறுகின்றனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கடும்பிடிப்போக்குக்கு எதிரான உள்ளகப் புரட்சியின் ஒரு வடிவமாக சுதந்திரக் கட்சிக்கு உயிரூட்டுவது என்ற பெயரில் சில அதிரடி மாற்றங்கள் அக்கட்சியின் கட்டமைப்பில் வெளிப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசியல் உணர்வலைகள், உள்வீட்டு நெருக்குவாரங்கள் மொட்டுக் கட்சிக்குள் தீவிரமடைந்து வந்தாலும், இன்றைய நிலையில் சாதகமாக ஒரே அம்சம்தான் ஆட்சித் தலைமைக்கு – கோட்டாபய ராஜபக்ஷவுக்கு – சார்பாக உள்ளது.

அதிருப்தியுற்றுள்ள எல்லாத் தரப்பும் மொட்டுக் கட்சிக் கூட்டணிக்குள் இருந்து கொண்டுதான் உள்வீட்டு அரசியல் புரட்சி செய்ய எண்ணுகின்றனவே தவிர, அந்தக் கூட்டமைப்புக்கு வெளியே போய், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடனோ அல்லது ஐ.தே. கட்சியுடனோ அணி சேரும் எண்ணத்திலேயே இல்லை என்பதுதான் அந்த சாதகமான அம்சம்.

ஆனால், ஆட்சி அதிகாரத்தரப்புக்குள் ஏற்பட்டிருக்கும் இத்தகைய அதிருப்தி நிலையை, ஆட்சித் தலைவர் நேரத்துடன் களைந்து நேர் சீராக்க முயற்சி எடுக்காவிட்டால், எதிர்காலத்தில் இந்த அதிருப்தி இப்போதைய எதிரணிக்கு சார்பாகத் திரும்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரசியல் அதிகாரத் தரப்பில் தன்னுடைய பிடி தளர்வதை உணர்ந்துள்ள ஆட்சித் தலைவர், அந்தப் பிடி மீண்டும் தமக்கு வலுவாகக் கிட்டும் என்று நப்பாசைப்படுகின்றார். அது வரையில் மாகாண சபைத் தேர்தல்களைத் தள்ளிப்போடுவது நல்லது என்றும் அவர் கருதுகின்றார்.

இருக்கின்ற நெருக்கடிக்குள் மாகாண சபைத் தேர்தல்களைத் தாம் நடத்த முயன்றால், உள் கட்டமைப்புக்குள் தாம் பலத்த சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்துள்ள ஜனாதிபதி, அதனால் அத்தேர்தல்களை தற்போதைய நிலைமையில் தள்ளிப்போடுவது தமக்கும் மொட்டுக் கட்டமைப்புக்கும் நல்லது என்றும் கருதுகின்றாராம்.

இந்தப் பின்புலத்தில், மாகாண சபைத் தேர்தலும் இப்போதைக்கு நடைபெறா என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

**ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்**

## ஆணைக்குழு அறிக்கைக்கு காத்திருப்பு; சட்ட நடவடிக்கை எடுப்பதில் தாமதம்!



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்காக காத்திருப்பதால் சட்ட நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

குறித்த விசாரணை அறிக்கை ஜனவரி 31 ஆம் திகதி கிடைக்கப்பெறும் என்று தான் எதிர்பார்க்கிறார் எனவும் மேலும் அதனை ஆராய்ந்து மேலும் சாட்சியங்கள் ஆய்வு செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பொறுப்புக் கூறவேண்டியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபரால் 12 சட்டத்தரணிகள் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களில் அமெரிக்க பிரஜைகளும் இருக்கின்றமையால், பொருத்தமான தகவல்கள் அமெரிக்க நீதிமன்றங்களுக்கும் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

## சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறிய 2 ஆயிரத்து 334 பேர் மேல் மாகாணத்தில் கைது

முகக் கவசம் அணியத் தவறியமை மற்றும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றத் தவறியமைக்காக மேல் மாகாணத்தில் ஜனவரி 5 ஆம் திகதி முதல் கடந்த திங்கட்கிழமை வரையான காலப் பகுதியில் மொத்தம் 2 ஆயிரத்து 334 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் 1,313 நபர்களிடம் விரைவான அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 19 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டது. மேலும் 1,021 பேர் பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்த இரு பரிசோதனைகளின் மூலமும் இதுவரை மொத்தம் 46 கொரோனா வைரஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களைத் தனிமைப்படுத்தல் நடமுறைகளைப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதற்கிடையில் இந்த குற்றச்சாட்டுக்காக மேல் மாகாணத்துக்கு வெளியே 23 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் மேல் மாகாணத்துக்கு வெளியே 2 ஆயிரத்து 438 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## மட்டக்களப்பில் 3 குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டன



மட்டக்களப்பில் உன்னிச்சை, நவகிரி, றூகம் ஆகிய குளங்களின் வான்கதவுகள் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) திறக்கப்பட்டுள்ளன என மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நடராசா நாகரட்ணம் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து கடும் மழைபெய்து வருவதையடுத்து குளங்களில் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

இதனால், உன்னிச்சை குளத்தின் மூன்று வான்கதவுகள் ஐந்து அடி உயரத்துக்கும், நவகிரி குளத்தின் இரண்டு வான்கதவுகள் ஐந்து அடி உயரத்துக்கும், றூகம் குளத்தின் இரண்டு வான்கதவுகள் எட்டு அடி உயரத்துக்கும் திறந்துவிடப்பட்டுள்ளன.

உன்னிச்சைகுளம் 33 அடியும், நவகிரி குளம் 31 அடியும் றுகம்குளம் 15 அடி 18 அங்குலம் நீர் கொள்ளவுள்ள குளங்களாகக் காணப்படுகின்றன.

இருந்தபோதும், குளத்தின் நீர்மட்டம் உயர்ந்து வருவதையடுத்து தேவையற்ற நீரை வெளியேற்ற வேண்டியதையடுத்து இந்தக் குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என நடராசா நாகரட்ணம் தெரி வித்துள்ளார்.

இந்நிலையில், இந்தக் குளங்களுக்கு அருகிலும், தாழ்நிலப் பகுதிகளிலும் உள்ள மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## சுகாதார உத்தியோகத்தர்கள் 21 பேருக்கு மட்டு.போதனா வைத்தியசாலையில் தொற்று

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய 21 சுகாதார துறையினருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் திருமதி க.கலாரஞ்சனி தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வருபவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பேணவேண்டும்.

நோயாளர் ஒருவருக்கு பார்வையாளர் ஒருவரே அனுமதிக்கப்படுவார். அதுவும் 15 நிமிடம் மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வயோதிபர்கள், இருதய, சிறுநீரக நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வருவதை தவிர்த்து வீட்டில் இருந்தே தொலைபேசியில் மருந்துகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

## கன்னியா விபத்தில் இளைஞர் மரணம்

திருகோணமலை-ஹொரவ்பொத்தானை பிரதான வீதியில் காணப்படும் கன்னியா கற்குவாரி வளைவில் மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் திங்கள் 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் புல்மோட்டை அரபாத் நகர் பகுதியைச் சேர்ந்த என்சிலூன் முஜிபுர் ரஹ்மான் (29வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பில் விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொரோனா தடுப்பூசி ஏற்றும் நிலைய எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டம்

கொரோனா தடுப்பூசி ஏற்றும் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசி திட்டம் மற்றும் தேசிய அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணி ஆகியன இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளன.

அதன்படி கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நிலையங்களின் எண்ணிக்கையை 4 ஆயிரத்தில் இருந்து 5 ஆயிரம் வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஊசி ஏற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கல், தடுப்பூசியை பெற்றுக்கொள்வோரைப் பதிவு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

கொரோனாவைக் கட்டுப்படுத்தக் கூடிய ஏதேனும் ஒருவகை அல்லது சில தடுப்பூசி வகைகளை விரைவில் நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சுகாதார உத்தியோகத்தர்கள் 21 பேருக்கு மட்டு.போதனா வைத்தியசாலையில் தொற்று

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய 21 சுகாதார துறையினருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் திருமதி க.கலாரஞ்சனி தெரிவித்துள்ளார்.

இன்று மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வருபவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பேண வேண்டும். நோயாளர் ஒருவருக்கு பார்வையாளர் ஒருவரே அனுமதிக்கப்படுவார்.அதுவும் 15 நிமிடம் மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வயோதிபர்கள், இருதய, சிறுநீரக நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வருவதை தவிர்த்து வீட்டில் இருந்தே தொலைபேசியில் மருந்துகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்

# தென்னகோனின் 'பேஸ்புக்' பதிவு: மேலும் அச்சத்தில் ஹரின் எம்.பி!

மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், முகப்புத்தகத்தில், ஜனாதிபதியின் கருத்தை (அம்பாறையில் – உகண உரை) ஆமோதிக்கும் விதமாக முகப்புத்தகத்தில் பதிவொன்றை பகிர்ந்துள்ளமையானது, இலங்கை எந்த திசையில் பயணிக்கிறது என தனக்கு அச்சத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர்தளத்தில் பதிவொன்றைப் பதிவுசெய்துள்ள ஹரின் பெர்னாண்டோ, இந்த முகப்புத்தக பதிவு பகிர்வு தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக் குழு அவதானம் செலுத்தியிருக்கும் எனத் தான் நம்புகிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் அம்பாறை – உகண பகுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றின் போதான கருத்து தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவிற்கு கடிதமொன்றை அனுப்பியிருந்த பின்னணியில், மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சமூக வலைத்தளத்தில் இவ்வாறு ஜனாதிபதியின் கருத்தை ஆமோதிக்கும் வகையில் நடந்துகொண்டுள்ளமை அவதானத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் கருத்து அடங்கிய காணொலி மற்றும் பிரதியை இணைத்து நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பிய கடிதம் தொடர்பில் கடந்த திங்கட்கிழமை மாலை 6.30 மணி வரை பொலிஸ் திணைக்களம் எந்த பதிலையும் வெளியிடவில்லை.

தேசத்துரோகம், இனப்படுகொலை, பயங்கரவாத, கொடூரமான செயல்களில் ஈடுபட்டவருக்கும் நாடாளுமன்றத்தில் கருத்து சுதந்திரத்துக்காகத் தமது அடிப்படை உரிமையை நடைமுறைப்படுத்தும் மக்கள் பிரதிநிதிக்கும் இடையிலான வேறுபாட்டை அடையாளம் காண்பதில் ஜனாதிபதி தோல்வி கண்டுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி தனது சேவையில் தொடர்ச்சியாக தோல்வியடையும் வரை தமது உயிருக்கு எவ்வாறான ஆபத்து ஏற்பட்டாலும், அவர் விரும்பாவிட்டாலும் உண்மையை உரைக்கும் பொறுப்பை தாம் நிறைவேற்ற வேண்டும்.

நான் ஒருபோதும் பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவனல்லன் என்பதை நினைவுபடுத்த வேண்டும். தமிழ் மக்களை வாக்களிப்பிலிருந்து தடுப்பதற்கு நான் ஒருபோதும் பயங்கரவாதிகளுக்கு லஞ்சம் வழங்கவில்லை. இதுவரை எவரைவிடவும் அதிகளவிலான பொலிஸ் அதிகாரிகளை கொலை செய்த கருணா அம்மானை கட்டியணைக்கவில்லை. அனைத்தையும் விட நான் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கை பிரஜையே தவிர வேறொரு நாட்டின் பிரஜையல்ல.

நான் அவருக்குப் பிடிக்காத விடயங்களை பற்றி பேசினால் என்னை 'நாயை போன்று கொலை செய்வதற்கு' அவரால் முடியும் என ஜனாதிபதி தெளிவாகக் கூறினார். பாதுகாப்புப் படைகளின் தலைவர் மற்றும் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி நந்தசேன கோட்டாபய ராஜபக்ஷவால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலின் பாரதூரத் தன்மையைக் கருத்திற்கொண்டு அவரால் எனக்கு பாதிப்பு ஏற்படலாம் என்பது உணர்த்தப்பட்டுள்ள நிலையில் அவர் தொடர்பில் மேலும் சந்தேகம் கொள்வதற்கு எனக்கு காரணம் இல்லை. அது உறுதியானது.

நான் அவருடைய முதற்பெயரை குறிப்பிட்டதால் மாத்திரம் ஜனாதிபதி இந்தளவு குழப்பமடைந்தமை தொடர்பில் நான் ஆச்சரியமடைகிறேன் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

குறித்த கடிதத்தில் இறுதியில், தாம் உயிரிழந்தால் இதுவரையான காலத்தில் அத்தகைய அச்சுறுத்தலை விடுத்த ஒரே ஒருவரின் அபிப்பிராயத்துக்கு அமைய அது இடம்பெறும் என நினைக்கிறார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

இந்த கடிதத்தின் பிரதிகளை சபாநாயகர், சட்ட மா அதிபர், கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள், ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விவேகானந்தரின் பிறந்ததினம் வவுனியாவில் தடை விதிப்பு!



சுவாமி விவேகானந்தரின் 158 ஆவது பிறந்ததினத்தை அனுஷ்டிக்க சுகாதார தரப்பினரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வவுனியா ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தரின் நினைவுத் தூபியை நகர சபையினர் சுத்தம் செய்து நேற்று (செவ்வாய்க்கிழமை) பிறந்தநாளை அனுஷ்டிப்பதற்குறிய ஏற்பாடுகளை முன்னெடுத்த போதிலும் அதற்கு சுகாதாரப் பிரிவினர் தடை விதித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் 124 ஆக அதிகரித்துள்ளமையால், சுகாதார நடைமுறைகளுக்கு அமைய நிகழ்வை நடத்த சுகாதாரப் பிரிவினர் தடையுத்தரவு பிறப்பித்தனர்.

இந்த நிலையில், தடையுத்தரவை மீறி நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டால், தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவீர்கள் எனவும் உத்தரவு பிறப்பித்துள்ளனர். இதன் காரணமாக நேற்று காலை 8.30 மணியளவில் இடம்பெறவிருந்த சுவாமி விவேகானந்தரின் 158 ஆவது பிறந்ததின நிகழ்வு நிறுத்தப்பட்டுள்ளது.

# ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்குக்கு மேலும் 3 மாதங்கள் தடுப்பு!

சுமார் ஒன்பது மாதங்களாக சி.ஐ.டி. தடுப்பில் உள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை மேலும் மூன்று மாதங்களுக்கு தடுப்புக் காவலில் தடுத்து வைத்து விசாரிக்க பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்துள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கடந்த திங்கட்கிழமை கோட்டை நீதிவான் பிரியந்த லியனகேவுக்கு அறிவித்துள்ளது.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கான ஆவணங்களில் பாதுகாப்பு அமைச்சர் கையெழுத்திட்டுள்ளார் எனவும் இதன்போது சி.ஐ.டியினர் மன்றுக்கு மேலதிக விசாரணை அறிக்கையை கையளித்து தெரிவித்தனர்.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் விவகாரத்தில் சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் அவர்கள் கூறினர்.

தற்போது ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் கொவிட் 19 தொற்று காரணமாக களுத்துறை பொலிஸ் கல்லூரியில் சிகிச்சை பெறுகிறார் எனவும் சி.ஐ.டியினர் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் 2020 ஏப்ரல் 14 ஆந் திகதி சி.ஐ.டி. யினரால் கைது செய்யப்பட்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் இன்று வரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை கைது செய்யும் சந்தர்ப்பத்தில் எதுவித காரணமும் தெரிவிக்கப்படவில்லை என்று அவரது சட்டத்தரணி கள் மனு மீதான விசாரணயின் போது தெரிவித்திருந்தனர்.

# உள்ளூராட்சித் தேர்தல் முறைமையை மீள்பரிசீலனை செய்ய குழு நியமனம்!

உள்ளூராட்சித் தேர்தல் முறைமையை மீள்பரிசீலனை செய்வதற்காக மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் முன்னாள் செயலாளரும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்கவின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி குழுவில் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சுதந்த லியனகே, காணி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜயலத் ரவி திஸாநாயக்க ஆகியோர் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் கட்டளை சட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ கலப்பு முறையின் காரணமாக உள்ளூராட்சி நிறுவனங்களின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டதாக பலதரப்புக்களிடமிருந்தும் முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. இந்நிலையிலேயே அவற்றை ஆராய்ந்து, மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழுவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!
நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=



கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778
லக்சுமி வெதுப்பகம்
ஆறுகால் மடம்.
077 218 9718

காலைக்கதிர் Kalaikkathir

# சடலங்களை அடக்கம் செய்வது குறித்து அல்குர் ஆனில் குறிப்பிடப்படவில்லையாம்!

## கண்டுபிடித்தார் கம்மன்பில



சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பாக அல்குர் ஆனில் எந்தவோர் இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.

இதன்போது, சமீபத்தில் நாடாளுமன்றத்தில் அல்குர்ஆன் தொடர்பாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். அதனை ஆய்வு செய்தா முஸ்லிம்களின் சடலங்களை தகனம் செய்வது தொடர்பாக கருத்துத் தெரிவித்தீர்கள்? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு பதிலளித்து உரையாற்றும்போதே அமைச்சர் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அமைச்சர் –

அல்குர்ஆனை முழுமையாக படித்த பின்னரே நான் கருத்துத் தெரிவித்தேன்.

அல்குர்ஆனை நான் 2 முறை வாசித்தேன். அல்குர்ஆனில் எந்தவோர் இடத்திலும் சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பில் குறிப்பிடப்படவில்லை.

அல்குர்ஆன் தொடர்பில் நான் விசேட நிபுணர் அல்லன். விசேட நிபுணர் யாராயினும் நான் தெரிவித்த கருத்து தொடர்பில் கருத்து தெரிவிக்குமாறு நான் கோரிக்கை விடுத்திருந்தேன். அல்குர்ஆனில் குறிப்பிட்ட பக்கத்தை சுட்டிக்காட்டி நான் இதனைத் தெரிவித்தேன்.

குர்ஆனில் இந்த சடல அடக்கம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்குமாயின், அது தொடர்பில் விளக்கம் அளிக்குமாறு நான் கேட்டிருந்தேன்.

ஆனால் இது தொடர்பாக எவரும் பதிலளிக்கவில்லை. சிலர் சமூக ஊடகங்கள் மூலமாக அல்குர்ஆன் பற்றித் தகவல்கள் அனுப்பி வைத்திருந்தனர். ஆனால் அவற்றில் எதிலும் சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. – என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# திரைப்படத்துறைக்கு ஈராண்டுகள் பொழுதுபோக்கு வரி விலக்களிப்பு!



திரைப்படத்துறையை ஈராண்டு காலத்திற்கு பொழுதுபோக்கு வரியிலிருந்து விலக்களிப்பதற்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

கொவிட் – 19 தொற்றுக்கு மத்தியில் உள்நாட்டு திரைப்படத்துறையை பாதுகாக்கும் நோக்கில் ஈராண்டு காலத்துக்கு நிவாரணம் பெற்றுத் தருமாறு திரைப்படத் துறை சார்ந்தவர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தீர்மானத்திற்கேற்ப திரைப்படத்துறையை ஈராண்டு காலத்துக்கு பொழுதுபோக்கு வரியிலிருந்து விலக்களிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் ஒப்புதல் வழங்கியுள்ளன.

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி மற்றும் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோரும் இத்தினத்தில் இது தொடர்பில் ஒப்புதல் வழங்கியுள்ளனர்.

அதற்கமைய 2021- 2022 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு திரைப்படத்துறையில் நாடளாவிய ரீதியில் தாக்கம் செலுத்தும் வகையில் பொழுதுபோக்கு வரியிலிருந்து விலக்களிக்கப்படும். 2023 ஆண்டு முதல் திரைப்படத்துறைக்கான பொழுதுபோக்கு வரியை 7.5 சதவீதமாகக் குறைப்பதற்கும் இதன்போது ஒப்புதல் வழங்கப்பட்டது.

இதுவரை 5 சதவீதம் முதல் 25 சதவீதம் வரை பல்வேறு சதவீதங்களின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களால் பொழுதுபோக்கு வரி அறவிடப்பட்டது. இந்தப் புதிய ஒப்புதலுக்கமைய முழுநாட்டுக்கும் ஒரு பொழுதுபோக்கு வரி அறிமுகப்படுத்தப்படும்.

உள்ளூர் திரைப்பட கலைஞர்களின் கூட்டணி, இலங்கை திரைப்பட இயக்குநர் சங்கம், இலங்கை திரைப்பட காட்சிப்படுத்துனர் சங்கம் மற்றும் இலங்கை திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல கலைஞர்கள் கடந்த 8 ஆம் திகதி, பிரதமரை சந்தித்து கொவிட் – 19 நெருக்கடிக்கு மத்தியில் திரைப்படத்துறை மிகவும் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டினர்.

அவர்களின் பிரதான கோரிக்கைகளில் பொழுதுபோக்கு வரியை நீக்குமாறும் கோரப்பட்டது. அதற்கமைய பிரதமரின் தீர்மானத்துக்கேற்ப நேற்று இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

# பயனாளர்களின் அச்சம் குறித்து வட்ஸ்அப் நிறுவனம் விளக்கம்!

தனி நபரின் விவரங்கள், இருப்பிடம் உள்ளிட்ட தகவல்கள் முகநூலுக்கு பகிரப்படாது என வட்ஸ் அப் நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.

பேஸ்புக்கிற்கு சொந்தமான பரிமாற்ற செயலியான வட்ஸ்அப் பலராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் வட்ஸ்அப் அதனுடைய பிரைவசி கொள்கைகளையும் பயன்பாட்டு விதிகளையும் மாற்றியமைப்பதாக அறிவித்தது.

ஒருமுறை மட்டும் இப்படி தனியுரிமை கொள்கைகள் மாற்றப்படுகின்றன என்று பயனாளர்களுக்கு தகவல் வந்தது.

மேலும் பிரைவசி பாலிசி அப்டேட் செய்யவில்லை என்றால் அடுத்த மாதம் முதல் வட்ஸ்அப் ஐ பயன்படுத்த முடியாது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனால் வட்ஸ்அப் பயனாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்நிலையில் இதுதொடர்பாக விளக்கமளித்துள்ள வட்ஸ்அப் நிறுவனம், நண்பர்கள், குடும்பத்தினர் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள் பேஸ்புக் நிறுவனத்துடன் பகிரப்படாது என்றும் வட்ஸ்அப் குரூப்புகள் தனித்தன்மையுடன் தொடர்ந்து செயற்படும் என்றும் அறிவித்துள்ளது.

பயனாளர்கள் தகவல்களை நீக்கவோ, டவுன்லோட் செய்து கொள்ளவோ முடியும். பயனாளர்களின் தனிப்பட்ட செய்திகள், அழைப்பு வசரத்தை சேமித்து வைக்க மாட்டோம் என்றும் வட்ஸ்அப் தொடர்பாக பல்வேறு வதந்திகள் பரவி வருவதால் விளக்கமளிக்கின்றோம். – என்றும் தெரிவித்துள்ளது.

# மேலும் 165 சுற்றுலாப் பயணிகள் உக்ரைனில் இருந்து வந்துள்ளனர்

உக்ரைன் நாட்டிலிருந்து மேலும் 165 சுற்றுலாப் பயணிகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) நாட்டை வந்தடைந்தனர்.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலுக்கு மத்தியில் உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக அவர்கள் நாட்டுக்குள் அழைத்துவரப்பட்டனர் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 180 சுற்றுலாப்பயணிகளுடன் இலங்கைக்கான முதல் உக்ரேனிய பயணிகள் விமானம் டிசெம்பர் 28 ஆம் திகதி மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியிருந்தது. அவர்களில் இதுவரையில் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவிலிருந்து 530 பேர் குணமடைவு!

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 42 ஆயிரத்து 621 ஆக உயர்ந்துள்ளது.

24 மணிநேரத்தில் மட்டும் மேலும் 530 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது. நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 48 ஆயிரத்து 949 ஆக உயர்ந்துள்ளது.

இதில் 6 ஆயிரத்து 88 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் அதேவேளை 625 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 240 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டி திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் விசேட வழிபாடு





தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டி, நேற்று (செவ்வாய்க்கிழமை) மதியம் மன்னார், திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம் பெற்றன.

மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய குடும்ப உறவுகள் மற்றும் அரசியல் கைதிகளின் உறவுகள் இணைந்து இந்த விசேட வழிபாடுகளை மேற்கொண்டனர்.

சிறைச்சாலைகளில் தற்போது கொரோனா தொற்று பரவுவதன் காரணமாகத் தமிழ் அரசியல் கைதிகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாகவும் அவர்களின் குடும்பத்தினர் பல்வேறு துயரங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

தற்போது வரை சுமார் 14 தமிழ் அரசியல் கைதிகள் வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகி உள்ளனர். இலங்கை அரசு 6 ஆயிரம் சிறைக் கைதிகளை விடுவித்திருக்கின்றமையும் தகுதியான இன்னும் பல கைதிகளை படிப்படியாக விடுவிக்கத் தீர்மானித்துள்ளனர்.

இந்நிலையில் தமிழ் அரசியல் கைதிகள் மீது கரிசனை கொண்டு அவர்களை விடுவிப்பதன் மூலம் சிறைகளில் பரவிவரும் பெருந்தொற்றிலிருந்து அவர்களின் உயிரைப் பாதுகாக்கும் படி காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய குடும்ப உறவுகளால் கூட்டுப்பிரார்த்தனை, மன்னார், திருகேதீஸ்வரம் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளுடன் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 12 மணிக்கு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கு.மதுசுதன் M.Sc
(தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
யாழ் பல்கலைகழகம்)



# யார் இன அழிப்பாளர்கள்?

இன அழிப்பில் நாமும் ஓர் அங்கமா?

இக்கட்டுரையை வாசித்த பின் நீங்களே இதற்கான விடையை எடுத்துக் கொள்ளுங்கள்.

08.01.2021 அன்று யாழ் பல்கலைக்கழக தூபி இடிக்கப்பட்டதன் பின் ஏற்பட்ட மாணவர் போராட்டம் உலகம் முழுவதும் வியாபித்ததும் பலகலைக்கழக மானியங்கள் ஆணக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் விடுத்த ஊடக பேட்டியின் சாராம்சத்தில் ஒரு கருத்தை மீள நினைவூட்டுவது சாலப்பொருத்தமாகும்.

யாழ்பாண பல்கலைக்கழகத்தில் தற்போது 1,500 சிங்கள மாணவர்கள் கல்வி கற்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தினை மேற்கோள்காட்டியிருக்கிறார்.

இதற்கும் அதற்கும் என்ன சம்மந்தம் என யோசிக்காதீர்கள். இங்கு அதிக சிங்கள் சகோதர மாணவர்கள் படிப்பதை அவர் எடுத்தியம்பியிருகிறார். அதற்காக அவர்கள் கல்வி பயிலக் கூடாதோ அல்லது அவர்களை இங்கு பல்கலைத் தெரிவுக்கு அனுமதிக்கக் கூடாதோ என்பது வாதமல்ல.

இந்த 1,500க்கும் அதிகமான சிங்கள சகோதர மாணவர்கள் எவ்வாறு அள்ளு கொள்ளையாக யாழ் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகுகிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டும். அதற்கு நாமே முழு பொறுப்பு.

முன்னர் யாழ் பல்கலைகழக கம்பஸ் பெடியனாம், கம்பஸ் பெட்டயாம் எண்டா இருக்கிற மதிப்பு வேறு.



எப்படியாவது கம்பஸ் போயிட்டா சரி. எந்தத்துறை எண்டாலும் கம்பஸ் போனா சரி. அதுதான் யாழ்பாணத்தவர்களின் இலக்கு.

போர் காலங்களில் வடக்கு மாணவர்களுக்கு யாழ். கம்பஸ்தான் கம்பஸ், வெளி கம்பஸ் அரிதாகவே அப்பிளிகேசன் பண்ணப்படும்.

வெளியேறும் பட்டதாரிகளுக்கும் வேலைவாய்புக்களும் இங்கேயே கிடைக்கும் . அப்போது கம்பஸ்ஸில் இருந்த துறைகளும் குறைவென்றபடியால் குறைவான பட்டதாரிகளே வெளியேறினார்கள். அரச வேலையும் கிடைத்தது.

ஆக எத்துறை என்றாலும் யாழ் கம்பஸே தெரிவு, கனவு.

ஆனால் போர் நிறைவுக்கு பின் இன்றுபல வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள் கால் பதித்ததாலும், பல்வேறு துறைகள் தனியார் துறை கல்வி நிறுவனமூடாகக் கிடைப்பதாலும் (அவற்றைக் குறை கூறவில்லை),புலம்பெயர் தேசங்களில் இருந்து உறவுகள் அதிக பணம் அனுப்புவதாலும், இங்கு கல்வி கற்கும் இன்றைய தலைமுறை மாணவர்கள் கம்பஸுக்கு விஞ்ஞானத் துறை (Biological Science) கிடைத்தாலும் அதை அவர்கள் விரும்புவதில்லை. அந்த துறைக்குப் பதிவு பண்ணுவதில்லை. ஆக அதற்கு தமிழ் மாணவர்கள் பதிவு பண்ணாததனால் அந்த இடங்களினை நிரப்ப தெற்கிலிருந்து அதிக மாணவர்கள் குறைந்த வெட்டுபுள்ளியுடன் இங்கு நிரப்பப்படுகிறார்கள்.

இதெல்லாம் ஒரு துறையா? என்ற நோக்கும், கொழும்பில் சென்று ஏதோ கோர்ஸ் படிக்கலாம், வெளிநாட்டு பணம் இருக்கிறது என்பதாலும், ஏன் இந்த கோர்ஸ் போவான் பணம் செலுத்தி கல்வி பயிலும் தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் ஏதோ ஒரு கோர்ஸ்னை பயில்வோம், இல்லை வெளிநாடு போகலாம் என எண்ணுவதன் வெளிப்பாடாகும்.

இதனால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு சிங்கள்,முஸ்லிம் மாணவர்கள் இலகுவாக நிரப்பப்படுகிறார்கள்.

இன்று யாழ் பல்கலைகழகத்தில் விஞ்ஞான துறையில் அதிகம் பெரும்பான்மை இன மாணவர்களே!

அதன் மாணவர் ஒன்றியம் இன்னும் சில வருடங்களில் அவர்கள் வசமாகும். ஏன் அனைத்து பீட மாணவர் ஒன்றியமும் ஒரு நாள் அவர்கள் வசமாகும்.

பிறகு நடப்பவை பற்றி இங்கு குறிப்பிட வேண்டிய அவசியமல்ல.

கிளிநொச்சி பலகலைகழக தொழில்நுட்ப பீடம், விவசாய பீடம், இயந்திரவியல் பீடம் போன்றவற்றிலும் இதே நிலைதான். வெளிவரும் விரிவுரையாளர்கள் கூட அவர்களாகவே இனி அதிகம் இருப்பர்.

இன்னொரு தகவல்.

யாழ்பாண மாணவர்கள் பலர் கணிதத்துறை எடுத்தாலும் அவர்களுக்கு கிளிநொச்சி பொறியியல் பீடம் கிடைத்தாலும் அவர்கள் கொழும்பு, கண்டி பல்கலை கிடைக்க வேண்டும் என்பதற்காக கிளிநொச்சி (யாழ் பல்கலை) பதிவு பண்ணாமல் திரும்ப ஏ.எல் சோதனை எழுதுவது எத்தனை பேருக்கு தெரியும்?

ஆக அந்தப் பீட வெற்றிடங்களுக்கு தெற்கு மாணவர்கள் நிரப்பப்டுகிறார்கள்.

ஏன் பயோ மாணவர்கள் சித்த மெடிசின் கிடைதால் போக மாட்டார்கள். அந்த வெற்றிடங்களுக்கு சிங்கள்,முஸ்லிம் மாணவர்கள் நிரப்பப்பட்டு இன்று யாழ் பலகலைக்கழகத்தில் 1,500 மாணவர்கள் சிங்கள மாணவர்கள். முஸ்லிம் சகோதர மாணவர்களையும் கணக்கிட்டு யாழ்.பல்கலை கழகத்தின் மொத்த மாணவர் தொகையில் இருந்து கழித்துக் கணக்கிட்டால் தமிழ் மாணவர்கள் தொகை தெரியவரும்.

இது நாம் விட்ட தவறா அவர்கள் விட்ட தவறா?

இந்த விடயங்கள் பற்றி உயர்தர பாடசாலைகளும், விரிவுரையாளர்களும் இன்னும் போதிய விளக்கங்கள் ஏற்படுத்துவதாகத் தெரியவில்லை. சிலர் ஏற்படுத்தினாலும் அது சரியாக சென்றடைவதில்லை.

இப்போது கூறுங்கள் யார் குற்வாளிகள் என்று.

ஏன் இன்னுமொன்று.

யாழ்பாண ஆஸ்பத்திரிகளில் அதிகமாக தாதியர் சேவையில் சிங்களவர்களே இணைகின்றனர் ஏன்?

நாம் நேர்ஸ் ஆவதா? என்ற யாழ்பாணத்தவர்களின் ஒரு செயற்கை மிதவாத நினைப்பு.

நேர்சிங் படிப்பதற்கு பதில் நாம் பிறைவேற் கோர்ஸ் படிப்போம் என்ற முடிவுகள்.

நேர்சிங் டிப்ளோமாவுக்கு விண்ணப்பிக்க முன்



னர் பயோ படித்தவர்களாலேயே இயலுமாக இருந்தது. எனினும் தாதியர் குறைபாடுகளினால் கணித துறை மாணவர்களையும் உள்ளீர்தார்கள். அதற்கும் அசையவில்லை எம்மவர்கள். பிறகு கலைத் துறை படித்தவர்களும் விண்ணப்பிக்கலாம் என்றார்கள். அதற்கும் நம் தமிழ் மாணவர்கள் மசியவே இல்லை. இப்போது ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தோடு எடுக்கிறார்கள்.

இந்த சீத்துவத்தில் சிங்கள தாதியினர் மருத்துவ சேவைக்காக நியமிக்கபடாமல் என்ன செய்வது? இன்று ஆஸ்பதிரிகளில் அவர்கள் அதிகமாகி வருகிறார்கள். பிறகு சொல்வது அரசு சிங்கள்வர்களினை நியமிக்கிறது என்று.

கொஞ்சம் எம்மை நாம் பரிசீலனை செய்யலாமே!

எமது மாணவர்கள் தம் எதிர்காலத்துக்கு இப்பொருளாதாரம் தரும் கோர்ஸ்களை தேர்ந்தெடுக்காமல் தவிர்த்து கண்துடைப்புக்கு ஏதோ ஒரு கோர்ஸ் படிப்பது புலம் பெயர் பணத்தினாலேயாகும். சில புலம்பெயர் உறவுகள் வாயளவில் உரிமை பேசாமல் இவ்விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அதை விடுவோம். அடுத்த ஒன்று.

அன்று தொடக்கம் இன்று வரை பரம்பரை பரம்பரையாக கொலசிப் பாஸ் பண்ணுற பிள்ளையும், ஓ .எல். 9ஏ எடுக்கிற பிள்ளையும், ஏ .எல் சிறந்த பெறுபேறு பெறும் மாணவர்களினை ஊடகங்கள் பேட்டி கண்டால் நான் டொக்டராக வர வேண்டும், நான் இஞ்சினியராக வர வேண்டும் என்ற தாத்தா கால மனப்பாடங்கள் இன்றும் மறையவில்லை.

> இன்று யாழ் பல்கலை கழகத்தில் விஞ்ஞான துறையில் அதிகம் பெரும்பான்மை இன மாணவர்களே!
> அதன் மாணவர் ஒன்றியம் இன்னும் சில வருடங்களில் அவர்கள் வசமாகும்.
> ஏன் அனைத்து பீட மாணவர் ஒன்றியமும் ஒரு நாள் அவர்கள் வசமாகும்.



மாறாக நவீன உலகில் ஸ்பேஸ் சயன்ஸ், ஏரோ டைனமிக் ,"மைக்கிறோ எஞ்சினியரிங், டி .என் .ஏ எஞ்சினியரிங் போன்ற துறைகளில் பெரியவனாக வர வேண்டும் என எந்த மாணவரும் இலட்சியமாக கூறுவதில்லை. காலம் மாறினாலும் நம் கோலங்கள் மாறவில்லை.

ஏரோ டைனமிக், ஏரோ எஞ்சினீரிங் போன்ற துறைகளில் யாரும் பட்டமோ புலமையோ கொள்ளாது பலாலி சர்வதேச விமான நிலையம் வந்த போது அதில் வேலையினை நிரப்ப அத் துறையில் தேர்ந்த சிங்களவர்களினைத் தானே நிரப்பலாம். பின்னர் சிங்களவர்களினை நிரப்பிவிட்டார்கள் என கூவுவது.

இவை அனைத்தும் வேடிக்கையே!!

எம் பிரதேசத்தில் கண்ணுக்கு தெரிந்தே சிங்கள பெரும்பாண்மை இன விகிதாசார பரம்பலை பல துறைகளில் நாமே ஏற்படுத்த அனுமதித்துவிட்டு ஐயோ ஆகிரமித்து விட்டானே என கூவுவது அநியாயம்.

வடக்கின் முக்கிய கல்வி துறையிலேயே சிங்களவர்களினை ஊடுருவ விட்டது யார்? அதனூடாக அதிக வேலை வெற்றிடங்களினை அவர்கள் நிரப்ப காரணமாக அமைந்தது நாமா? அவர்களா?

நாம் நீண்ட இன விடுதலை பயணத் நீடித்த கண்ணோட்டங்கள், வகிபங்குகள் வகிக்காது சுயநல யாழ்ப்பாணத்தவர்களாக எப்போது மாறினோமோ அப்போதே சத்தமற்ற இனவழிப்புக்கு நம்மை நாமே உட்படுத்தியிருக்கிறோம்.

இவை கண்ணுக்கு புலப்படும் காணி அபகரிப்பு, விகாரை அமைப்பு , நினைவு சின்ன அழிப்பினை விட ஆபத்தானவை.

இப்போது சொல்லுங்கள் யார் இன அழிப்பாளர்கள்?

இனியாவது சமூக அக்கறையோடு எழுந்து பணியாற்றுங்கள்.

இது குறைகூறும் பதிவல்ல. விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சி.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா
## 24.02.2021 மற்றும் 25.02.2021

கலாநிதி, முதுமெய்யியல்மாணி, முதுமாணி, பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், இளமாணி, தகைமைச் சான்றிதழ் ஆகிய பட்டங்களையும் சான்றிதழ்களையும் அளிப்பதற்காக 24.02.2021 மற்றும் 25.02.2021 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்து 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்கள் 29.01.2021 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோள்களை கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

1. கலாநிதி
2. முதுமெய்யியல்மாணி
3. பண்பாட்டுக் கற்கையில் முதுகலைமாணி - 2020
4. சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணி - 2017
5. கல்வியியலில் முதுமாணி
6. முது வியாபார நிர்வாகமாணி
7. கல்வியியலில் பட்டப்பின் தகைஷ்மைச் சான்றிதழ் (முழுநேரம்) - 2017
8. கல்வியியலில் பட்டப்பின் தகைஷ்மைச் சான்றிதழ் (முழுநேரம்) - 2018
9. கல்வியியலில் பட்டப்பின் தகைஷ்மைச் சான்றிதழ் (பகுதிநேரம்) - 2019 - வவுனியாவளாகம்
10. இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தில் பட்டப்பின் தகைமைச்சான்றிதழ் - 2020
11. வைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சைமாணி - 2020
12. மருத்துவ விஞ்ஞானமாணி - 2012
13. சித்தவைத்திய மற்றும் சத்திரசிகிச்சைமாணி - 2017
14. சித்தவைத்திய மற்றும் சத்திரசிகிச்சைமாணி - 2018
15. தாதியியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2017
16. தாதியியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2018
17. மருந்தகவியல்மாணி (சிறப்பு) - 2017
18. மருந்தகவியல்மாணி (சிறப்பு) - 2018
19. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2017
20. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2018
21. விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2017
22. விஞ்ஞானமாணி (பொது) - 2017
23. கணனி விஞ்ஞானத்தில் (சிறப்பு) விஞ்ஞானமாணி - 2017
24. கணனி விஞ்ஞானத்தில் (சிறப்பு) விஞ்ஞானமாணி - 2018
25. கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி - 2017
26. கலைமாணி (சிறப்பு) - 2017
27. கலைமாணி (சிறப்பு) - 2018
28. கலைமாணி (பொது) - 2017
29. கலைமாணி (பொது) - 2018
30. நுண்கலைமாணி (கர்நாடக சங்கீதம்) - 2017
31. நுண்கலைமாணி (பரதநாட்டியம்) - 2017
32. நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) - 2017
33. சட்டமாணி - 2018
34. வியாபார நிர்வாகமாணி - 2017
35. வியாபார நிர்வாகமாணி (பொது) - 2017
36. வணிகமாணி - 2017
37. வணிகமாணி - 2018
38. விவசாய விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2018
39. பொறியியல் விஞ்ஞானமாணி - 2018
40. பொறியியல் விஞ்ஞானமாணி - 2019
41. பிரயோகவிஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2017

**வவுனியா வளாகம்**

42. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பமாணி (பொது)
43. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)
44. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)
45. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (பொது)
46. விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணிப்பிடலும்) (பொது)
47. கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)
48. வியாபார முகாமைத்துவமாணி (பொது)
49. வியாபார முகாமைத்துவமாணி (சிறப்பு)
50. செயற்திட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி

**அறிவுறுத்தல்கள்:**

**1. வேண்டுகோள்படிவங்கள்:**

விண்ணப்பதாரிகள் வேண்டுகோள் படிவத்தை www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

**2. கட்டணங்கள்**

**இளமாணிப் பட்டதாரிகள்**

| | |
|---|---|
| பட்டமளிப்புவிழாக் கட்டணம் | ரூபா. 750.00 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | ரூபா. 750.00 |
| பட்டச்சான்றிதழ் கட்டணம் | ரூபா. 700.00 |
| புகைப்படக் கட்டணம் | ரூபா 600.00 |
| **மொத்தம்** | **2800.00** |

**பட்டப்பின்படிப்புப் பட்டதாரிகள்**

| | |
|---|---|
| பட்டமளிப்புவிழாக் கட்டணம் | ரூபா. 2000.00 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | ரூபா. 1000.00 |
| பட்டச்சான்றிதழ் கட்டணம் | ரூபா. 1000.00 |
| புகைப்படக் கட்டணம் | ரூபா 600.00 |
| **மொத்தம்** | **4600.00** |

**குறிப்பு:** பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள் மேலங்கிக்கான கட்டணத்தையும் புகைப்படத்திற்கான கட்டணத்தையும்; செலுத்தத் தேவையில்லை.

**3. கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாக குறிப்பிடவும்.

**கீழே தரப்பட்ட பொருத்தமான குறிப்பிலக்கத்தையே குறிப்பிடுக.**

**❖ இளமாணிப் பட்டதாரிகள்**

நேரில் சமுகமளிப்போர் - 970000052100308
சமுகமளிக்காதோர் - 970000052100340

**❖ பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள்**

நேரில் சமுகமளிப்போர் - 970000082100310
சமுகமளிக்காதோர் - 970000082100351

பட்டமளிப்பிற்கு நேரில் சமுகமளிப்போரோ சமுகமளிக்காதோரோ அதற்கேற்ப மேலே குறிப்பிட்டவாறு தங்கள் பட்டங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச் சீட்டில் குறிப்பிடவும். மேற் குறிப்பிட்ட குறிப்பிலக்கம் குறிப்பிடப்படாத எந்த ஒரு பற்றுச்சீட்டும் வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**4. பட்டதாரி மேலங்கிகளும் விருந்தினர் நுழைவுச் சீட்டும்**

நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்களுக்கான ஒரு பட்டதாரி மேலங்கியும் ஒரு விருந்தினர் நுழைவுச்சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளையில் வழங்கப்படும்.

**5. பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

**6. வேண்டுகோள் படிவங்களை சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்துடன் பணம் செலுத்திய வங்கிப் பற்றுச் சீட்டின் மூலப் பிரதி மற்றும் பட்டச் சான்றிதழில் பெயரினை உறுதிப்படுத்தும் விண்ணப்பத்தினையும் இணைத்து பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிகளில் பட்டத்திற்கு தொடர்பான முகவரிக்கு 29.01.2021 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். (கடித உறையின் இடதுபக்க மூலையில் '35வது பட்டமளிப்பு விழா வேண்டுகோள் படிவம்' எனக் குறிப்பிடவும்)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள்:**

**உதவிப் பதிவாளர்/ அனுமதிகள் கிளை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றவர்கள்:**

**பிரதிப் பதிவாளர்/ பரீட்சைகள் கிளை,**
**வவுனியா வளாகம்,**
**வவுனியா.**

கடவுச்சீட்டு அளவு (35mm X 45mm) உடைய வெற்றுப் பின்புலத்துடனான புகைப்படம் ஒன்றினை வேண்டுகோள் படிவத்துடன் இணைத்து அனுப்புவதுடன், அதனது மென்பிரதியை கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு பல்கலைக்கழக மாணவர் பதிவிலக்கத்தினைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு **உதவிப்பதிவாளர்/ அனுமதிகள்கிளையின் தொலைபேசி இலக்கம் 021 222 6714** அல்லது **ar.admissions@yahoo.com** எனும் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித்திகதி: 29.01.2021**

**பதிவாளர்**

# அடக்குமுறைகளை கையாள்வதன் ஊடாக உணர்வெழுச்சியை மழுங்கடிக்க முடியாது!

## செல்வம் அடைக்கலநாதன் காட்டம்



அடக்குமுறைகளைக் கையாண்டு, உணர்வு எழுச்சியை மழுங்கடித்துவிடலாம் என அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கக்கூடாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

யாழில் செய்தியாளர்களிடம் கருத்துரைத்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

செல்வம் அடைக்கலநாதன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

ஓர் இனத்தின் உணர்வை மழுங்கடிப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்துக்கோ அல்லது அரசாங்கத்துக்கே எந்த உரிமையும் இல்லை.

வடக்கு கிழக்கில் வாழ்கின்ற ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுகளை மழுங்கடிக்க நினைக்கும் இலங்கை அரசாங்கத்தின் சிந்தனை, ஆயுத போராட்டத்தை ஒழித்து விட்டோம் என்பதாகும்.

அதாவது உலகளவில் பெருமைகொள்ளும் வகையில் ஆயுதப் போரோட்டத்தை முறியடித்து விட்டோம் என்ற மமதையோடு இருக்கின்றமை, ஒருபோதும் நல்ல நிலைமையை ஏற்படுத்தாது.

ஆகவே ஆயுதப்போராட்டத்தை ஒழித்ததன் ஊடாக எந்த போரோட்டமும் வெடிக்காதென அரசாங்கம் சிந்திப்பது தவறாகும். ஓர் இனத்தை ஒடுக்குவதன் ஊடாக அந்த இனம் கிளர்ந்தெழுகின்றபோது அது போராட்டமாக மாறும்.

ஏற்கவேவே எமது தமிழ் இனம் அதனை சந்தித்திருக்கின்றது. ஆகவே இலங்கை அரசாங்கம் மாற்றுச் சிந்தனையுடன் செயற்பட வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## போரில் உயிரிழந்தோரை நினைவுகூர தமிழர்கள் அனுமதிக்கப்படுவார்களா?

### அம்பிகா சற்குணநாதன் கேள்வி



உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களை நினைவுகூருவதில் அரசாங்கத்திற்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை என்று அமைச்சர் சரத் வீரசேகர கூறியிருக்கிறார்.

அவ்வாறெனில், எதிர்வரும் மே மாதம் எவ்வித அடக்குமுறைகளோ சட்டரீதியான தடைகளோ இன்றி போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு தமிழர்கள் அனுமதிக்கப்படுவார்களா என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரை நோக்கி கேள்வி எழுப்பியிருக்கிறார்.

அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

நினைவுத்தூபியின் ஊடாக அப்பாவிப் பொதுமக்களை நினைவுகூருதல் என்ற போர்வையில் பயங்கரவாதிகளே நினைவு கூரப்படுகின்றனர் என்பதற்கான ஆதாரம் என்ன? அதேபோன்று போரின் போது உயிரிழந்தவர்களைத் தமிழர்கள் நினைவுகூருவதில் அரசாங்கத்துக்கு எவ்வித பிரச்சினையும் இல்லையென்றால், கடந்த 2020 மே மாதம் உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூருகின்றமை ஏன் தடைசெய்யப்பட்டது?

இவையனைத்துக்கும் மேலாக சரத் வீரசேகரவின் டுவிட்டர் பதிவின்படி, எதிர்வரும் மே மாதம் எவ்வித அடக்குமுறைகளோ, சட்ட ரீதியான தடைகளோ, இடையூறுகளோ இன்றி போரில் உயிரிழந்த வர்களை நினைவுகூருவதற்கு தமிழர்கள் அனுமதிக்கப்படுவார்களா? என்று அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

## அடுத்த மாதத்தில் இலங்கைக்குக் கிடைக்கின்றன ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா, பைசர் தடுப்பூசிகள்

### இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெரனாண்டோ புள்ளே தெரிவிப்பு

அடுத்த மாதம் ஒக்ஸ்போர்ட் மற்றும் பைசர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளதாக இலங்கை அரசாங்கம் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) தெரிவித்துள்ளது.

அந்தவகையில் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை இந்தியா மூலமாகவும், பைசர் - பயோஎன்டெக் தடுப்பூசியை உலக சுகாதார அமைப்பின் மூலமாகவும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அதன்பிரகாரம் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை பெற்றுக் கொள்வது தொடர்பாக இந்தியாவுடன் தொடர்ந்தும் பேச்சு இடம்பெற்றுவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடனான சந்திப்பின்போது, கொரோனா தடுப்பூசியை பெற்றுகொள்ள இந்தியாவின் உதவியை இலங்கை அரசாங்கம் கோரியிருந்தது.

இதற்கிடையில், கோவக்ஸ் திட்டத்தின் கீழ் இலங்கையின் 20 சதவீத மக்களை உள்ளடக்கும் வகையில் தடுப்பூசியை வழங்குவதாக உலக சுகாதார அமைப்பு உறுதியளித்திருந்தது.

இந்நிலையில் உலக சுகாதார அமைப்பு பைசர் - பயோஎன்டெக் தடுப்பூசியை வழங்கும் என எதிர்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தடுப்பூசியைப் பெறுபவர்களின் முன்னுரிமை பட்டியலை சுகாதார அமைச்சு ஏற்கனவே முடிவுசெய்துள்ளது. அதன்படி தொற்றால் பாதிக்கப்பட்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், முன் னணி தொழிலாளர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை துப்பாக்கிச் சூடு விசாரணைக்கு இரு குழு!

அம்பாறை – கல்முனை பிரதான வீதியில் தனியார் சொகுசு வாகன விற்பனை நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளுக்காக இரு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கள் அதிகாலை இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், அது தொடர்பாகத் தீவிர விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹன தெரிவித்துள்ளார்.

அடையாளம் தெரியாத நபர் ஒருவர், தான்னியக்க துப்பாக்கியைக் கொண்டு இந்த துப்பாக்கிச் சூட்டை நடாத்தியுள்ளார்.

இந்த துப்பாக்கிச்சூட்டில் சில வாகனங்களுக்கும், விற்பனை நிலைய கண்ணாடிகளுக்கும் சேதமேற்பட்டுள்ளன.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் அருகில் இருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளதாகவும், சாதாரணமாக நடந்து வரும் நபர் ஒருவர், உரப்பைக்குள் இருக்கும் துப்பாக்கியைக் கொண்டு சுடுகின்றமை அதில் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

துப்பாக்கிப் பிரயோகத்தை முன்னெடுத்த நபர் தொடர்பிலோ அல்லது துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் தொடர்பிலோ உறுதியான தகவல்கள் வெளிப்படுத்தப்படாத நிலையில், மேலதிக விசாரணைகள் அறிவியல் தடயங்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 150 சட்டத்தரணிகளை பொலிஸ் அதிகாரிகளாக இணைக்கத் தீர்மானம்!



150 சட்டத்தரணிகளை பொலிஸ் அதிகாரிகளாக பொலிஸ் சேவைக்கு இணைத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளதாக நீதிபதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சட்டச் சிக்கல்கள் தொடர்பாகப் பொதுமக்களுக்குத் திறமையாகச் சேவை செய்யப்படுவதை உறுதி செய்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை ஒப்புதலைத் தொடர்ந்து தனிநபர்கள் பொலிஸ் சேவையில் சேர்க்கப்படுவார்கள். காவல்துறையினர் தங்கள் திறமையின் அடிப்படையில் பதவி உயர்வுகளைப் பெறுவார்கள்.

150 அதிகாரிகள் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கி நாடு முழுவதும் சேவையில் நிறுத்தப்படுவார்கள், அதே நேரத்தில் அவர்களுக்கு சட்டம் மற்றும் காவல்துறை சேவையிலும் சிறப்பு பயிற்சி கிடைக்கும்.

அதிகாரிகள் தமிழில் சரளமாக இருப்பது கூடுதல் நன்மையாக இருக்கும், ஏனெனில் இது தமிழ் சமூகத்தை சிறப்பாக ஆதரிக்க உதவும் என்றும் நீதியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொரோனாக் குணமடைவு 42 ஆயிரத்தை தாண்டியது!

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 42 ஆயிரத்து 91 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் மேலும் 766 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 48 ஆயிரத்து 380 ஆக உயர்ந்துள்ளது.

இதில் 6 ஆயிரத்து 57 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 603 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 232 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

### தென்னை சொட்டு நீர் பாசனம்

**தென்னையின் வேரானது மரத்தின் அடிப்பகுதியிலிருந்து 200 செ.மீ. ஆழம் வரையும் 100 செ.மீ. ஆழம் வரையும் சென்று தண்ணீரை உறிஞ்சக் கூடியது. சொட்டு நீர்ப்பாசனம் மூலம் நீர் பாய்ச்சுவதற்கு மரத்தின் அடிப்பகுதயில் இருந்து 100 செ.மீ. ஆழத்தில் நாலு நீர் சொட்டிகளை சமமான இடைவெளியில் பொறுத்தி, ஒரு மணி நேரத்திற்கு 30 லிற்றர் என்ற அளவில் 2.5 மணி நேரம் நீர் பாய்ச்ச வேண்டும். 8 நாள்களுக்கு ஒருமுறை இவ்வாறு நீர்பாய்ச்ச வேண்டும்.**

**ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி**

காலைக்கதிர் Kalaikkathir

# புலிகளை நினைவுகூரும் தூபிகள் எங்கிருந்தாலும் இடிக்க வேண்டும்

## காட்டத்துடன் விமல் வீரவன்ஸ கருத்து



கொழும்பு. ஜன. 12.

யாழ். பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்ட தூபியை மாத்திரமல்லாது விடுதலைப்புலிகளை நினைவு கூரும் தூபிகள் வடக்கில் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அவற்றை முழுமையாக இடித்தழிக்க வேண்டுமென அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், விடுதலைப் புலிகளை நினைவுத் தூபிகள் அமைத்தோ அல்லது பகிரங்க நிகழ்வுகள் நடத்தியோ நினைவு கூரல் நடத்துவது நாட்டின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெரும் குற்றமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் அவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவிக்கையில், ஒரு பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்ற வகையில் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த தூபியைத் துணைவேந்தர் இடித்து அகற்றியுள்ளார். இது அவரின் தற்துணிவை எடுத்துக்காட்டுகின்றது.

இறுதிப்போரில் மரணித்த பொதுமக்களை நினைவேந்தும் தூபி என்ற பெயரில் அங்கு அமைக்கப்பட்டிருந்தது புலிகளை நினைவேந்தும் தூபியே. இதைப் பல்கலைக்கழத்தில் வைத்திருப்பது சட்டவிரோதமானது. அதற்கமைய நல்லதொரு தீர்மானம் எடுத்து அந்தத் தூபியைத் துணைவேந்தர் இடித்துள்ளார்.

மூவின மாணவர்களின் நன்மை கருதி இந்தத் தீர்மானத்தை அவர் எடுத்திருப்பாரென நான் நினைக்கின்றேன். எனவே, மாணவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாமல் கல்வியைத் தொடர வேண்டும் என விமல் குறிப்பிட்டுள்ளார்.

# சுமந்திரனின் வீட்டில் ஒட்டப்பட்ட தனிமைப்படுத்தல் அறிவிப்பு நீக்கம்

## ஒட்டிய பொலிஸாரே வந்து அகற்றினர்

யாழ்ப்பாணம். ஜன. 12.

சுமந்திரன் எம்.பி. சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார் எனத் தெரிவித்து அவரது யாழ் நகர வீட்டு முன்புறத்தில் பொலி ஸார் நேற்று ஒட்டிய 'ஸ்ரிக்கர்' இன்று மாலை பொலிஸாராலேயே அகற்றப்பட்டது.

ஹக்கீம் எம்.பிக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டமையை அடுத்து அவருடன் பழகிய எம். பிக்களை பி.சி.ஆர். சோதனை செய்யும்படி கோரப்பட்டது. அதன் படி சுமந்திரன் எம்.பியும் சோதனை செய்தார். அவருக்குத் தொற்று இல்லை என அறிவிக்கப்பட்டது.

எனினும் யாழ்ப்பாணம் பொலிஸார் அவரது வீட்டில் 'தனிமைப் படுத்தல்' ஸ்ரிக்கரை ஒட்டினர்.

அதனால் சுமந்திரன் எம்.பி. தன்னை வீட்டுக்குள் முடக்கிக் கொண்டவர்.

இதனையடுத்து இன்று பகல் சுமந்திரன் எம்.பியுடன் தொடர்பு கொண்ட நாடாளுமன்ற அதிகாரிகள், நாடாளுமன்றத்தை எப்படிக் கூட்டுவது என்பது பற்றிய கட்சித் தலைவர்களின் கூட்டம் நாளை நாடாளுமன்றத்தில் நடைபெறவிருப்பதால் அதில் பங்குபற்றும்படியான அழைப்பை விடுத்தனர்.

எனினும், பொலிஸ் உத்தரவில் தாம் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதால் இக் கூட்டத்தில் தாம் பங்குபற்ற முடியாதிருப்பதாக சுமந்திரன் எம்.பி. பதிலளித்தார்.

இதனையடுத்து நாடாளுமன்ற படைக்கல சேவிதர் சுமந்திரன் எம்.பியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று அடையாளப்படுத்தப்படாத எந்த எம்.பிக்கும் இப்படித் தனிமைப்படுத்தல் உத்தரவு வீடுகளில் பிறப்பிக்கப்படவில்லை, தான் அது குறித்து யாழ்ப்பாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொள்வார் என சுமந்திரனுக்கு அவர் தெரியப் படுத்தினார்.

அதன் பின்னர் சற்று நேரம் கழித்து பொலிஸார் வந்து தாம் ஒட்டிய தனிமைப் படுத்தல் ஸ்ரிக்கரை தாங்கே ள அகற்றினர்.

சுமந்திரன் எம்.பியைத் தனிமைப்படுத்தலில் முடக்குவதில் யாழ் பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் பிரசாத் பெர்னாண்டோ முழு மூச்சாகச் செயற்பட்டார் எனச் செய்திகள் வெளியா

# அனைத்து நீர்ப்பாசனக் குளங்களும் கிளிநொச்சியில் வான் பாய்கின்றன!





கிளிநொச்சி. ஜன. 12.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர்ப்பாசனக் குளங்களும் வான்பாய்கின்றன. அந்தவகையில் இரணை மடு குளம், கல்மடுகுளம், அக்கராயன்குளம், புதுமுறிப்பு குளம், வன்னேரிக்குளம், கரியாலை நாகபடு வான்குளம், கனகாம்பிகைகுளம், பிரமந்தனாறு குளம், குடமுருட்டிகுளம் ஆகிய பெரிய நீர்ப்பாசனக்குளங்கள் அனைத்தும் வான்பாய்கின்றன.

இரணைமடு குளத்திற்கான நீர்வருகை தொடர்ந்தும் காணப்படுவதனால் குளத்தின் வான் கதவுகள் பதினான்கும் தொடர்ந்தும் திறந்து விடப்பட்டுள்ளன என நீர்பாசன திணைக்களம் தெரிவிக்கின்றது.

இரண்டு வான் கதவுகள் 2 அடியாகவும், 4 வான் கதவுகள் 1 அடி 6 அங்குலமாகவும், 4 வான் கதவுகள் 1 அடியாகவும், 4 வான் கதவுகள் 6 அங்குலமாகவும் திறந்து விடப்பட்டுள்ளன என நீர்ப்பாசன திணைக்களம் தெரிவிக்கின்றது. தொடர்ச்சியான நீர் வருகை காணப்படுவதனால் திறக்கப்பட்ட வான் கதவுகளின் அளவுகள் அதிகரிக்கப்படலாம் எனவும், கனகராயன் ஆற்று படுக்கையின் கீழ் உள்ள மக்கள் குறிப்பாக பன்னங்கண்டி, கண்டாவளை, முரசுமோட்டை, பரந்தன், ஊரியான், உமையாள்புரம் உள்ளிட்ட பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாக செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது,

இதேவேளை கிளிநொச்சி நீர்பாசன குளங்களான கல்மடு குளம் 10 அங்குல மும், பிரமந்தனாறு குளம் 8 அங்குலமும், கனகாம்பிகை குளம் 5 அங்குலமும் வான் பாய்ந்து வருகின்றன.

மேலும் அக்கராயன் குளம் 7 அங்குலமும், கரியாலை நாகபடுவான்குளம் 10 அங்குலமும், புதுமுறிப்பு குளம் 8 அங் குலமும், குடமுருட்டி குளம் 7 அங்குலமும், வன்னேரிக்குளம் 4 அங்குலமும் வான் பாய்ந்து வருகின்றன என நீர்ப்பாசன திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நீர்நிலைகளை அண்மித்த மற்றும் நீர் வடிந்தோடும் பகுதிகளில் உள்ள மக்களிற்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் தமது வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதுடன், பாதுகாப்பான முறையில் நடந்து கொள்ளுமாறும் நீர்பாசன திணைக்களம் தொடர்ந்தும் அறிவுறுத்தி வருகின்றது.

இதேவேளை, கனகாம்பிகைகுளம், இரத்தினபுரம், ஆனந்தபுரம் கிழக்கு, புளியம்பொக்கணை, பெரியகுளம், உழவனூர், பிரமந்தனாறு உள்ளிட்ட தாழ்வுநில பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் அவதானமாக செயற்படுமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தி உள்ளது.

தொடர்ச்சியாக மழைவீழ்ச்சி பதிவா கும் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும், குளங்கள் மற்றம் நீர் தேங்கியுள்ள ஆழமான பகுதிகளை பார்வையிடச் செல்வதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சிறுவர்கள், முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் தொடர்பில் பொதுமக்கள் அவதானம் செலுத்த வேண்டும் எனவும், இடர்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் உடனடியாக கிராம சேவையாளர் ஊடாக அல்லது பொலிஸார், இராணுவத்தினரின் உதவியை பெற்றுக் கொள்ளுமாறும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

# ரஞ்சன் ராமநாயக்காவுக்கு 4 ஆண்டுகள் கடூழியச் சிறை

## நீதிமன்றை அவமதிப்பு வழக்கில்



கொழும்பு. ஜன. 12.

நீதிமன்றை அவமதித்தமைக் காக முன்னாள் பிரதி அமைச் ச ரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்காவுக்கு நான்கு ஆண்டு கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து உயர் நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்தது.

நீதியரசர்கள் சிசிர டி அப்ரூ, விஜித் மலல்கொட, ப்ரீத்தி பத்மன் சூரசேன ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை ஏகமனதாக வழங்கியது.

தீர்ப்பை அறிவித்த மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வின் தலைமை நீதியரசர் சிசிர டி அப்ரூ, ரஞ்சன் ராமநாயக்காக்கு எதிராக சட்டமா அதிபர் சுமத்திய நீதிமன்ற குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப் பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

அதன்படி, ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்ற அவமதிப்பு குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, அவருக்கு கடூழியத்துடன் கூடிய நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படுவதாக நீதியரசர் தீர்ப்பளித்தார்.

2017ஆம் ஆண்டு ஒகஸ்ட் 21ஆம் திகதியன்று அலரிமாளிகையில் நடந்த கலந்துரையாடலுக்குப் பின்னர் ஊடகங்களிடம் பேசிய அப்போதைய பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, ''இந்த நாட்டில் பெரும்பான்மையான நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்கள் ஊழல் மிக்கவர்கள் என்று கூறியிருந்தார்.

இந்தக் கருத்தின் ஊடாக நீதிமன்றத்தை ரஞ்சன் ராமநாயக்க அவமதித்தார் எனக் கூறி, மாகல்கந்தே சுதத்த தேரர் மற்றும் ஓய்வு பெற்ற விமானப் படை அதிகாரியான சுனில் பெரேரா ஆகியோரால் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதி ராக உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ரஞ்சன் ராமநாயக்க நீதித்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தி நீதித்துறையை அவமதித்துள்ளார் என்று சட்டமா அதிபரால் குற்றஞ்சாட்டப்பட்டது.

# கிளிநொச்சியில் வெள்ளத்தினால் 745 பேர் பாதிப்பு



கிளிநொச்சி. ஜன. 12.

தொடர்ச்சியாக பெய்து வரும் கன மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று வரை(12) 235 குடும்பங்களைச் சேர்ந்த 745 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. அத்தோடு பல கிராமங்களில் சில பிரதேசங்கள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளன எனவும், போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது.

அந்த வகையில் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 49 குடும்பங்களைச் சேர்ந்த 152 பேரும், கண்டாவளையில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேரும், பூநகரியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும், பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 132 குடும்பங்களைச் சேர்ந்த 408 பேரும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட் டுள்ளனர்.

பொது மக்களின் தற்காலிக மற்றும் நிரந்த வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளமையால் அவர்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக ஊழியர்கள், இரா ணுவத்தினர் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் மக்களுக்கு தேவையான உதவிகளை மேற்

# உண்மையைப் பேசிவிட்டே உள்ளே செல்கின்றேன்....!

## சிறைக்குப் புறப்பட்ட போது ரஞ்சன் விசனத்துடன் கூற்று

கொழும்பு. ஜன. 12.

கொள்ளையடிக்கவில்லை, குடு விற்பனை செய்யவில்லை. உண்மையைப் பேசிவிட்டே உள்ளே செல்கின்றேன். அனைவருக்கும் கடவுள் துணை.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

நீதிமன்ற வளாகத்திலிருந்து, பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சிறைச்சாலை பஸ்ஸில் ஏற்றப்படும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

# இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை தலையிட்டுத் தீர்க்க மோடியிடம் கோரிக்கை

## யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை தலைவர் கடிதம்

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தலையிட்டுத் தீர்க்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு யாழ் இந்தித் துணைத் தூதுவர் ஊடாக அனுப்பி வைத்த கடிதத்தில் கோரியிருக்கின்றார் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன்.

அக்கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

தங்களுக்கு எமது தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இங்கு தமிழ் மக்கள் கடந்த பல ஆண்டுகளாக பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவருவதைத் தாங்கள் நன்கறிவீர்கள்.

தமிழ் மக்கள் இந்நாட்டிற்கு அந்நியர் வருவதற்கு முன் தம்மைத்தாமே ஆண்டு வந்தார்கள். அந்நியர் இலங்கைத்தீவைக் கைப்பற்றிய பின் தமது நிர்வாகச் சுலபத்திற்காகத் தமிழ், சிங்களப் பிரதேசங்களை இணைத்தனர். பின் இந்நாட்டைவிட்டு வெளியேறும் போது இவ்வதிகாரங்களைத் தாம் வைத்திருந்தது போலவே ஒரே நிர்வாகத்தின் கீழ்க் கையளித்து விட்டுச் சென்றனர். இதனால் ஜனநாயக அடிப்படையில் தமிழர் சிறுபான்மையினர் ஆகிவிட்டனர்.

சுதந்திரத்தின் பின் ஆட்சியமைத்த அரசுகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவகையில் இந்த நாட்டை நிர்வகிக்கத் தவறினர். இதனால் மனமுடைந்த தமிழ் மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தினார்கள். இந்நேரங்களின் போதெல்லாம் தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாக வாக்குறுதிகளை வழங்குவதும் பின் அதனைக் குழப்புவதுமாகவே செயற்பட்டு வந்தனர். இதனோர் வடிவமாகவே 1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் அமைந்தது.

இந்த ஒப்பந்தம் தமிழர் ஓரளவு திருப்தியடையக் கூடியதாகவிருந்தாலும் தமிழ்மக்களின் முழுமையான அபிலாசைகளை நிறைவுசெய்வதாக அமையவில்லை. இதனடிப்படையில் இலங்கை அரசமைப்பில் 13ஆவது திருத்தம் மேற் கொள்ளப்பட்டது.

அதேசமயம், தமிழர் உரிமைகளை நிலைநாட்ட மேற்கொள்ளப்பட்ட ஆயுதப்போராட்டம் 2009இல் இலங்கை அரசால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இதன்பின் தமிழ் மக்களுக்கு பரிபூரண அதிகாரங்களை வழங்கி சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்துவார்களென்று நம்பியிருந்தோம். அப்படி எதுவும் நடைபெறவில்லை. இன்று 13 ஆவது திருத்தத்தைக் கூட நடைமுறைப்படுத்தமுடியாத அளவுக்கு நிலைமை மோசமாகுமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இதேசமயம், இந்து ஆலயங்கள் பல்வேறு யுக்திகளைப் பயன்படுத்தி தாக்கப்பட்டு வருகின்றன. இங்கு ஏனைய மதங்கள் இருப்பினும் அதிகளவான அச்சுறுத்தல்கள் வெவ்வேறு கோணங்களிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன.

நடைபெற்ற யுத்தத்தில் தமிழ் மக்கள் பலர் அநியாயமாகக் கொலைசெய்யப்பட்டமையைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். இவர்கள் தொடர்பான நினைவுச் சின்னங்கள் கூட அழிக்கப்பட்டு வருகின்றன. இவர்கள் தொடர்பான தர்ப்பணக் காரியங்களைக் கூடப் பொது வெளியில் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனைச் செய்யாது விட்டால் ஏற்படும் தோஷங்கள் பற்றி இத்துறை சார்ந்த பூரண அதியுயர் அறிவு பெற்ற தங்களுக்கு யான் விளக்க வேண்டியது பொருத்தமற்றது. இந்நிலையில் ஏதும் செய்வதறியாதுள்ளோம்.

இந்துக்களின் பெருந்தலைவரான சேர் பொன். இராமநாதன் சொத்திலமைந்த யாழ். பல்கலைக்கழகத்தில் யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் இன்னுயிர் நீத்தவர்கள் ஞாபக மாக நிறுவிய தூபி அழிக்கப்பட்டுள்ளது. இதனால் மனமுடைந்த மாணவர்களும், அரசியல்தலைவர்களும், பொதுமக்களும் அவ்விடத்தில் திரண்டு போராட்டம் நடத்தும் நிலை ஏற்பட்டது.

இந்நேரத்தில் இலங்கை அரசுக்கு பொருத்தமான ஆலோசனையை வழங்கி அவர்களைச் சரியான பாதையில் பயணிக்கச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கைத் தமிழரது பிரச்சினையைத் தங்களைத் தவிர எவராலும் தீர்க்கமுடியாதென்பதை யாம் நன்குணர்வோம்.

ஆத்மீக பலத்தை அபரிமிதமாகக் கொண்ட மாபெரும் உலகத் தலைவராகத் தாங்கள் திகழ்வதால் எம்மைப் பாதுகாக்கப் பொருத்தமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தருமாறு மிகுந்த வாஞ்சையோடு கேட்டுக் கொள்கிறேன். - என்று உள்ளது.

## சிறைச்சாலைகளில் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை வீழ்ச்சி

### சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

சிறைச்சாலைகளில் வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது.

அதற்கமைய கடந்த திங்கட்கிழமை தனிமைப்படுத்தப்பட்டுள்ள விளக்கமறியல் கைதியொருவருக்கு மாத்திரமே வைரஸ்தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்ததாக சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சிறைச்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகுபவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடைந்தே வருகின்றது.

அதற்கமைய கடந்த திங்கட்கிழமை தனிமைப்படுத்தப்பட்டுள்ள விளக்கமறியல்கைதிஒருவருக்குமாத்திரமேவைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 129 சிறைச்சாலை அதிகாரிகளும், 474 ஆண் சிறைக்கைதிகளும், 11 பெண் சிறைக் கைதிகளும், 3 ஆயிரத்து 410 ஆண் விளக்கமறியல் கைதிகளும், 234 பெண் விளக்கமறியல் கைதிகளும் உள்ளடங்களாக, 4 ஆயிரத்து 258 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 876 பேர் வெலிக்கடைச் சிறைச்சாலையிலும், 853 பேர் மெகசின் சிறைச்சாலையிலும், 809 பேர் மஹர சிறைச்சாலையிலும், 424 பேர் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையிலும், 348 பேர் நீர்கொழும்பு சிறைச்சாலையிலும் சேர்ந்தவர்கள்.

இதன்போது, வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் 121 சிறைச்சாலை அதிகாரிகள் குணமடைந்துள்ளமையுடன், 3 ஆயிரத்து 777 கைதிகளும் இவ்வாறு குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் 8 அதிகாரிகள் சிகிச்சை பெற்று வருகின்றமையுடன், 344 கைதிகள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இதன்போது சிறைச்சாலைகளில் வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் 8 பேரே இதுவரையில் உயிரிழந்துள்ளனர்.

# தமிழ் மக்களை அரவணைக்கின்ற எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை

## கூட்டமைப்பு எம்.பி. கலையரசன் விசனம்

(சந்திரன் குமணன் - அம்பாறை)





யுத்தத்தின் பின் மக்களை அரவணைக்கும் எண்ணம் இல்லை என்பது ஜனாதிபதியின் பேச்சில் தெரிகின்றது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைசந்தித்துஉலர்உணவுபொருள்களை வழங்கி வைத்த பின்னர் ஊடகங்களுக்கு இந்த கருத்தை அவர் முன்வைத்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

நாட்டில் இருக்கும் அரசியல் தலைவர்கள் மக்களை அச்சமூட்டும் வகையில் அரசியல் செய்து வருகின்றனர். குறிப்பாக மக்கள் பாதுகாப்பு அமைச்சரின் மோசமான இனவாத அடிப்படை வார்த்தைகளைப்பேசுவது மக்கள்மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி மோசமான சூழ்நிலையை நாட்டில் ஏற்படுத்தப் போகிறது .

தொடர்ச்சியாக தமிழ் மக்களை அடக்கி ஆள்வது என்ற வகையில் அவர்களது செயற்பாடுகள் இருக்கின்றன. எந்த ஒரு விடயத்தை எடுத்து பார்த்தாலும் அடக்கி ஆண்டு, நாம் சுதந்திரம் அற்ற நிலையில் இருக்க வேண்டும் என்பது அவர்களது செயற்பாடாக இருக்கின்றது. இந் நிலை மாற வேண்டும்.

நாங்கள் இந்த நாட்டில் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதையே விரும்புகின்றோம் . அவர்களது பேச்சில் சிறுபான்மை சமூகம் வாழ முடியாது என்றதொரு நிலையாக இருக்கின்றது. குறிப்பாக அது கிழக்கில் அதிகரித்துள்ளது.

நாட்டின் சனாதிபதி யுத்தத்தை உதாரணம் காட்டி மிக மோசமாக பேசியிருக்கின்றார். யுத்தம் முடிவடைந்த பின்னர் ஏனைய மக்களையும் அரவணைத்து நாட்டின் பிரஜை என்ற அடிப்படையில் செயற்பட வேண்டும். இது நாட்டை ஆளுகின்ற தலைவர்களது தலையாய கடமையாகும். மாறாக எம்மை மாற்று பார்வை கொண்டுபாக்கும் நிலை மாற வேண்டும்.

ஏனைய இனங்களை போன்று தமிழ் மக்களும் வாழ வேண்டும் என்றவகையில் எமது அரசியல் பணி முன்னெடுக்கப்படும். - என தெரிவித்தார்.

## புதுக்குடியிருப்பு சந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதன் அடிப்படையில் திறக்க அனுமதி வழங்கப்பட்டது என ஏனைய பொதுச் சந்தை வியாபாரிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

வடக்கு மாகாணத்தின் 34 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. இவற்றின் கீழ் 26 சபைகளின் கீழே 39 பெரும் சந்தைகள், மீன் சந்தைகள், இறைச்சிக் கடைகள் எனப் பல உள்ளன. இருப்பினும் வடக்கின் 5 மாவட்டத்திலும் இன்றுவரை தடை தொடர்வதனால் கொட்டும் மழையின் மத்தியில் வீதியோரம் சில வியாபாரிகள் விற்பனையில் ஈடுபடுகின்றனர். பலர் தொழிலை இழந்துள்ளனர்.

இவை அனைத்திற்கும் மத்தியில் கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா தாக்கம் குறைவாக காணப்பட்ட அடிப்படையில் அந்த மாவட்ட நிர்வாகம் அங்கே சந்தை இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது புதுக்குடியிருப்பு சந்தை மட்டும் நேற்றைய தினம் சில அரசியல்வாதிகளின் தலையீட்டினால் மீள இயங்க இரகசியமான முறையில் அனுமதிக்கப்பட்டமை வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் மீதான நம்பிக்கையை கேள்விக்கு உட்படுத்துகின்றது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியை தொடர்பு கொண்டி கேட்டபோது , இதற்கான அனுமதி தன்னால் வழங்கப்படவில்லை என்பதோடு அதனைத் திறப்பதற்கான பரிந்துரையையும் தான் வழங்கவில்லை எனத் தெரிவித்தார். இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது புதுக்குடியிருப்பு சந்தையை மீளத் திறப்பதற்கான அனுமதியோ அல்லது அது தொடர்பான ஆலோசனையோ தம்மிடம் பெறப்படவில்லை எனப் பதிலளித்தார்.

இதேநேரம் புதுக்குடியிருப்பு சந்தை தொடர்பில் மாகாண சுகாதாரப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, புதுக்குடியிருப்பின் நிலைமைக்கு ஏற்ப அந்த மாவட்ட நிர்வாகத்தையே முடிவினை மேற்கொள்ளுமாறு எம்மால் அறிவுறுத்தப் பட்டது. முடிவினை நாம் மேற்கொள்ளவில்லை எனப் பதிலளித்தார்.

அவ்வாறானால் எதன் அடிப்படையில் சந்தையைத் திறக்க அனுமதிக்கப்பட்டது என மாவட்ட பதில் சுகாதார வைத்திய அதிகாரியைத் தொடர்பு கொண்டு கேட்ட போது –

தற்போது நிலவும் அதிகரித்த மழையின் காரணமாக பகுதியளவிலேயே இயங்கினாலும் அதனை திறப்பதற்கான அனுமதி எனது முழுமையான அதிகாரத்திற்கு உட்பட்டதல்ல எனப் பதிலளித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பிலும் பெரும் வெள்ள அனர்த்தம் பல பகுதிகளில் போக்குவரத்துத் துண்டிப்பு!

## 4,557 பேர் இடம்பெயர்வு

**(க.விஜயரெத்தினம்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓயாது பெய்துவரும் கடும் மழை காரணமாக மட்டக்களப்பில் 1,419 குடும்பங்களைச் சேர்ந்த 4,557 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்டுள்ளார்கள் என மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் தெரிவித்தார்.

போரதீவுப்பற்று வெல்லா வெளி,ஏறாவூர்பற்று செங்கலடி, காத்தான்குடி, மண்முனைப்பற்று ஆரையம்பதி போன்ற பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 4,557 பேர் மழையினால் பாதிக்கப்பட்டு, வெள்ளநீர் வீடுகளுக்குள் உட் புகுந்து உறவினர்களின் வீடுக ளில் தங்கி வாழ்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கப்படுகின் றது.

இதேவேளை போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல பகுதிகள் வெள்ளத் தினால் மூழ்கியுள்ளமையுடன் போக்குவரத்துகளும் பாதிக்கப் பட்டுள்ளன எனப் போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேச செயலா ளர் செல்வி எஸ்.ராகுலநாயகி தெரிவித்தார்.

வெல்லாவெளி பிரதேச செய லாளர் பிரிவுக்குட்பட்ட 7 கிராம சேவை உத்தியோகஸ்தர் பிரிவு களில் 157 குடும்பங்களைச் சேர்ந்த 466 பேர் தற்போது பெய்துவரும் மழை காரணமாக தங்களின் இருப்பிடங்களில் இருந்து இடம்பெயர்ந்து தங்க ளின் உறவினர்களின் வீடுகளில் வசித்து வருகின்றார்கள். வேத்துச் சேனை,

பட்டாபுரம், கோயிற்போரதீவு போன்ற கிராமங்களைச் சேர்ந்த வர்களே இவ்வாறு உறவினர் வீடுகளில் வசித்து வருகின்றார் கள். வேத்துச்சேனை கிராமத்திற் கான தரைவழிப்போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது டன் வேத்துச்சேனையில் 89 குடும்பங்களைச் சேர்ந்த 267 வெள்ளத்தினால் நேரடியாக பாதிக் கப்பட்டுள்ளார்கள். இக்கிராம மக்களின் மேட்டுநிலப் பயிர் செய்கை, விவசாயச் செய்கை என்பன முற்றாக அழிவடைந் துள்ளன.

இக்கிராமத்தின் வெள்ளநில மையை பார்வையிடுவதற்காக சென்ற கிராமசேவை உத்தி யோகஸ்தர் வெள்ளத்தினால் இன்றையதினம் அடித்துச்செல் லப்பட்டு மரக்கிளையை பிடித்து தெய்வாதீனமாக உயிர்தப்பி யுள்ளமையுடன் அவருடைய 23 ஆயிரம் ரொக்கப்பணம், இரண்டு கையடக்க தொலைபேசிகள், டயரி கள், நாட்குறிப்புக்கள் உள்ளிட்ட பெறுமதியான உடமைகள் வெள் ளத்தினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை அடித்துச் செல்லப்பட்டன என அக்கிராம சேவையாளர் தெரிவிக்கின்றார்.

மேலும் வேத்துச்சேனை கிராமத்தில் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு இயந்திரப்படகு வசதி களுடன் வெல்லாவெளி பிரதேச செயலகத்தினால் சமைத்த உணவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக வெல்லாவெளி பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

நவக்கிரி அணக்கட்டின் நீர் மட்டம் வான் கதவுக்கு மேல் ஒன் றரை அடி மேவிப் பாய்கின்றமை யினால் நேற்று முன்தினம் இரவு இரண்டு வான்கதவுகள் 3 அடி திறக்கப்பட்டுள்ளன. இதன்காரண மாக வெல்லாவெளி– மண்டூர் பிரதான வீதி, 35 ஆம் கிராமம், உகணக்குச் செல்லும் பிரதான வீதி, சின்னவத்தை செல்லும் ராணமடு வீதி, காக்காச்சிவட்டை, ஆனைகட்டியவெளிக்கு செல்லும் பிரதான வீதி ஆகிய வீதிகள் ஊடாக வெள்ளநீர் சுமார் 5அடி பாய்வதன் காரணமாக போக்கு வரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன. கடமைக்குசெல்லுகின்ற அரசாங்க உத்தியோகஸ்தர்கள், பொது மக்கள், விவசாயிகள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள்.

வெள்ளம் காரணமாக வெல் லாவெளி,மண்டூர் சின்னவத்தை, ஆனைகட்டியவெளி, சமூளைய டிவட்டை,34 ஆம் கிராமம், 35 ஆம் கிராமம் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாய செய்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

பொறுகாமம் குளத்தின் நீர்மட் டம் அதிகரித்துள்ளதன் காரண மாக வெல்லாவெளி – கோவில் போரதீவு வீதியில் வெள்ள நீர் பாய்ந்து செல்வதை காண முடிகின்றது.

மழை காரணமாக போரதீவு பற்று பிரதேச செயலாளர் பிரிவில் பல பகுதிகள் பாதிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.







# கனடாவில் நேரு காலமானார்

ஈழப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்த வாசுதேவர்(நேரு) கொரோனாத் தொற்று காரணமாக கனடாவில் உயிரிழந்துள்ளார்.

யாழ். வடமராட்சி, வல்வெட்டித் துறையைச் சொந்த இடமாகக் கொண்டிருந்த வாசுதேவர் நேரு ஈழப் போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் தன்னை இணைத்துக் கொண்டு செயற்பட்டவர்களில் முக்கிய மான முன்னோடிகளில் ஒருவராகத்தி கழ்ந்து வந்தார்.

புலம் பெயர்ந்து கனடாவில் வசித்து வந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பாதிக்கட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட் டிருந்த இவருக்கு அண்மையில் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை மேற்கொள்ளப் பட்டிருந்தது.

இந்நிலையில் கொரோனாத் தொற்று காரணமாக சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் வெளிச்சவீடு இணையத்தின் பிரதான ஆசிரியர் என்பதும் குறிப்பி டத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.01.2021 இல் வெளியிடப்பெற்றது.

### வாழைச்சேனையில் நேற்று சுற்றிவளைப்பில்

# கள்ள மண் அகழ்வில் ஈடுபட்ட 13 பேர் 13 வாகனங்களுடன் மடக்கப்பட்டனர்



மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புனாணைமைலந்தனை பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட பதின்மூன்று சந்தேக நபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். பதின்மூன்று வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரி வித்தார்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புனாணைமைலந்தனைப் பிரதேசத்தில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர் என வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வாழைச்சேனை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து அந்த இடத்தில் சுற்றிவளைப்பு மேற்கொண்டனர்.

இதன்போது மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பதின்மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். பத்து உழவு இயந்திரங்கள் மற்றும் மூன்று கனரக வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. நீண்ட காலத்துக்குப் பிறகு அதிக வாகனங்களுடன் அதிக சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சட்டவிரோத மண் அகழ்வு மற்றும் சட்டவிரோத மரம் கடத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன எனவும், அதனை தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன மேலும் தெரிவித்தார்.

# யானை தாக்கி ஒருவர் சாவு!

மெதிரிகிரிய - சமகிபுர பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மெதிரிகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமகிபுர பகுதியில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை காட்டு யானையை விரட்டுவதற்கு முற்பட்ட விவசாயி ஒருவர், அந்த யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

சமகிபுர பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய விவசாயி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

காட்டு யானை ஒன்று தனது தோட்டத்திற்குள் அத்துமீறி நுழைந்து, அங்கிருந்த பயிர்களை சேதப்படுத்திக் கொண்டிருப்பதை அவதானித்த விவசாயி, பயிர்களை பாதுகாத்துக் கொள்வதற்காக அதனை விரட்ட முற்பட்டுள்ளார். இதன்போது, குழப்பமடைந்த யானை அவரைத் தாக்கியுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், மெதிரிகிரிய பொலிஸார் சம்பவம் தொடர்பான அடுத்தக்கட்ட விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வடக்கிற்கும் தெற்கிற்கும் வேறுபட்ட சட்டங்கள் என்பது சட்டவாட்சி கோட்பாட்டுக்கு முரணானது

### காவிந்த ஜயவர்தன எம்.பி. தெரிவிப்பு

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை தமிழ் உறவுகள் நினைவு கூர்வது தேசத்துரோக குற்றமல்ல. இந்த விடயத்தில் வடக்கிற்கும், தெற்கிற்கும் இருவேறுபட்ட சட்டங்களை செயற்படுத்துகின்றமை சட்டவாட்சி கோட்பாட்டுக்கு முரணானது.

தமிழ், முஸ்லிம் மக்களைப் புறக்கணித்து அரசாங்கம் இனப்பாகுப்பாட்டை பலப்படுத்த முயற்சிக்கிறது. யாழ்.பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவிடதூபி இடித்தழிக்கப்பட்டமை வன்மையாக கண்டிக்கத்தக்கது.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அமைக் கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுதூபி அழிக்கப்பட்டமை தொடர்பாகக் கருத்துரைக்கையில் மேற் கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

1976 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட அரசாங்கம் இனவாத கொள்கையை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டமையால் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு தோற்றம் பெற்றது.

பல்லின மக்கள் வாழும் நாட்டில் ஓர் இனத்தின் உரிமை மறுக்கப்படும் போது அங்கு உரிமைப் போராட்டம் தலைத்தூக்குவது இயல்பான விடயமாகும். சர்வதேச நாடுகளிலும் உரிமை போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டே ஆரம்ப காலத்தில் போராட்டங்கள் எழுந்து பிற்பட்ட காலத்தில் அவை போராட்ட இயக்கங்களாக மாற்றமடைந்தன. விடுதலைப்புலிகள் அமைப்பும் இவ்வாறான பின்னணியையே கொண்டுள்ளது.

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பால் அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதற்கு 1976 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட அரசாங்கங்கள் பொறுப்புக் கூற வேண்டும்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு தேசிய பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட்டு தேசிய நல்லிணக்கம் அனைத்து இன மக்கள் மத்தியிலும் செயற்படுத்தப்பட்டது. 2014 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையில் ஆட்சியில் இருந்த அரசாங்கம் இனவாதத்தை ஆயுதமாகக் கொண்டு செயற்படவில்லை.

அனைத்து இன மக்களின் ஆதரவுடன் 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. நல்லாட்சி அரசாங்கத்தில் ஒரு சில குறைபாடுகள் காணப்பட்டாலும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் பலப்படுத்தப்பட்டிருந்தது.

அந்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட இனக் கலவரங்களுக்குப் பின்னணியில் அரசியல்வாதிகளின் நோக்கங்கள் காணப்பட்டன. இன கலவரக் தை ஒரு தரப்பினர் தங்களின் அரசியல் எதிர்காலத்துக்குப் பயன்படுத்தி பயனடைந்து கொண்டார்கள்.

தனி சிங்கள மக்களின் வாக்குகளினால் மாத்திரம் 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது என்று குறிப்பிடுவது தவறாகும். தேர்தலுக்கு பின்னர் ஆட்சியமைக்கும் அரசாங்கம் அனைத்து இன மக்களையும் அரவணைத்து செயற்பட வேண்டும். ஆட்சிக்கு வந்த பின்னர் தேர்தல் காலத்தில் ஓர் இனம் மாத்திரம் தான் வாக்களித்தது என்று குறிப்பிடப்படும் போது இனங்களுக் கிடையில் முரண்பாடு மீண்டும் தோற்றம் பெறும். தற்போது இந்நிலைமையே காணப்படுகிறது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அமைக் கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்டமை கண்டனத்துக்குரியது. இனக் கலவரங்களில் உயிரிழந்தவர்களை அவர்களின் உறவினர்கள் நினைவுகூர்வது ஒன்றும் தேசத்துரோக செயற்பாடல்ல.

தெற்கில் உள்ள பல்கலைக் கழகங்களில் ஜே.வி.பியின் உருவச்சிலைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஆகவே இந்த விடயத்தில் வடக்கிற்கும், தெற்கிற்கும் இரு வேறுபட்ட தன்மையை கையாளுகின்றமை சட்டவாட்சிக்கோட்பாட்டுக்குமுரணானது.

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் அனைத்து இன மக்களையும் அரவணைத்து செயற்பட வேண்டும். தமிழ் - முஸ்லிம் மக்கள் தற்போது பல விடயங்களில் புறக்கணிக்கப்படுகிறார்கள். இந்நிலைமைதொடர்ந்தால் எதிர்காலத்தில் இனங்களுக் கிடையில் பாரிய முரண்பாடுகள் தோற்றம் பெறும். தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப எதிர்கட்சி என்ற அடிப்படையில் பொறுப்புடன் செயற்படுவோம். - என்றார்.

# சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தேர்தல்: இரு ஜனாதிபதி சட்டத்தரணிகள் வேட்புமனு!

இலங்கைசட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்கான தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

இந் நிலையில் இந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கடந்த திங்கட்கிழமை ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அதன்படி இம்முறை சட்டத் தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்கு ஜனாதிபதி சட்டத் தரணிகளான சாலிய பீரிஸ் மற்றும் குவேர டி சொய்ஸா ஆகியோர் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

# முதலாளித்துவ ஜனநாயகத்தின் வடிவமே அமெரிக்க மோதல்!

### வாசுதேவ நாணயக்கார கருத்து

ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடிப்படையாகக்கொண்டு இடம்பெற்ற ஜனநாயகவிரோத போராட்டம் மிகவும் அருவருக்கத்தக்க விடயமாகும்.

ரொனால் ட்ரம்ப் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்ற நிலையில், அதனை ஏற்றுக் கொள்ளாமல் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தி, மக்களை மோதல் நிலைக்கு தூண்டிவிடுகின்றமை, அந்த நாட்டின் நீண்டகால ஜனநாயக நற்பெயருக்கு மேற்கொள்ளப்பட்ட பாரியதொரு தாக்குதலாகும் என அமைச்சரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஐக்கியஅமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரொனால் டரப்பின் ஆதரவாளர் கெபிடல் கட்டடத்துக்குள் புகுந்து மேற்கொண்ட போராட்டம் தொடர்பாகத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

தீர்மானமிக்க மோதல் இடம்பெறும்போது முதலாளித்துவ தலைவர்கள் ஜனநாயகத்தை புறந்தள்ளிவிட்டு, அதிகாரத்தை செயற்படுத்துவதை தனது கையில் எடுத்துக்கொள்ளும் முயற்சியாகவே அமெரிக்காவில் இடம்பெற்ற வன்முறை சம்பவத்தின் மூலம் தெளிவாகின்றது. இது இரண்டு முதலாளித்துவ தலைவர்களுக்கிடையிலான மோதலாகும்.

அத்துடன் உண்மையில் முதலாலித்துவ விரோத சக்தி ஒன்று வெற்றி பெற்றிருந்தால், பேர்னி சென்டர்ஸ் போன்ற ஒருவர் நேற்று ஜோ பைடன் போன்றுவெற்றிபெற்றிருந்தால், அந்த நாட்டின் அரச இயந்திரமும், அவர்களுக்கு வழிநடத்த முடியுமான அனைத்து சக்திகளையும் இணைத்துக் கொண்டு, அந்த வெற்றியைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கும்.

அதேபோன்று தற்போது இருந்துவரும் அரச அதிகாரத்தை அவ்வாறே பாதுகாத்துக் கொள்ளவும் எந்தவொரு வன்முறைக்கும் அவர்கள் தயார் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

எனவே இந்த சம்பவமானது அனைத்து நாடுகளுக்கும் ஒரு பாடமாகும். அனைத்து நாடுகளிலும் மக்களின் சக்திக்கு அதிகாரத்தை, மக்களால் ஏற்படுத்தப்பட்டால், அதனை இல்லாமலாக்க அதிகார சக்தியால் பல்வேறு சதித்திட்டங்களை மேற்கொள்வதை நாங்கள் எதிர்பார்க்கவேண்டும். இதுதான் பாடமாகும்.

மேலும் அமெரிக்காவில் அவர்களுடைய அதிகார வர்க்கம் இரண்டு பிரிவினருக் கிடையில் இடம்பெற்ற பிளவால் இந்தளவு தூரத்துக்கு இந்த வன்முறை சென்றிருந்தால், அந்த நாட்டு மக்களுக்கு உண்மையான தலைவர் தெரிவாகி இருக்கும் நிலையில் உள்நாட்டு யுத்தம் ஒன்றைத் தவிர வேறு ஒன்றும் ஏற்படப்போவதில்லை என்பது மிகவும் தெளிவாகும். அதுதான் முதலாளித்துவ ஜனநாயகத்தின் உண்மையான வடிவமாகும். - என்றார்.

# கொழும்பு நகருக்கு எவரும் வரவேண்டாம் தொழில் ஆணையாளர் நாயகம் கோரிக்கை

ஊழியர் சேமலாப நிதியத்தின் நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கு மற்றும் அதனை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிப்பதற்காக கொழும்பு நாரஹேன்பிட்டி தொழிலாளர் செயலகத்துக்கு வருகின்றமையை தவிர்த்துக்கொள்ளவேண்டும் என தொழில் ஆணையாளர் நாயகம் சட்டத்தரணி பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கொவிட் தொற்று நிலைமை பரவும் நிலைமையுடன் பொது மக்கள் பாரியளவில் கொழும்பு பிரதான காரியாலயத்துக்கு வருகின்றமையைத் தவிர்க்கும் நோக்கில் ஊழியர் சேமலாப நிதியத்தின் நன்மைகளை பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் நாடுபூராகவும் அமைக்கப்பட்டிருக்கும் மாவட்ட மற்றும் வலய தொழிலாளர் காரியாலயங்களுக்குப் பகிந்தளிக் கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் மாவட்ட வலய தொழிலாளர் காரியாலயங்களில் பெற்றுக்கொடுக்கப்படும் ஊழியர்சேமலாபநிதியநன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவங்கள், அந்தக் காரியாலயங்கள் ஊடாகவே நேரடியாக இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கத் தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அதனால் தமது விண்ணப்பங்களை மாவட்ட அல்லது வலய காரியாலயங்களுக்கு வழங்குவதன் மூலம் நிதி பெற்றுக்கொள்வதில் எந்தவித கால தாமதமும் ஏற்படாது. அவ்வாறான காலதாமதம் ஏற்படும் என்ற சந்தேகம் அல்லது பீதியை ஏற்படுத்திக்கொள்ளவேண்டாம்.

அத்துடன் கொழும்பு பிரதேசத்தில் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய ஒருவரின் ஊழியர் சேமலாப நிதியை பெற்றுக் கொள்ளும் போது தற்போது, அந்த நிறுவனம் மூடி இருந்தால், அந்த நபர் மாத்திரம் தமது விண்ணப்படிவத்தை சமர்ப்பிப்பதற்காக தொழில் திணைக்களத்தின் கொழும்பு தொழிலாளர் பொதுச் செயலாளர் காரியாலயத்துக்கு வரவேண்டும். - என்று தெரிவித்துள்ளார்.